Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, SEPTEMBER 04, 2021

சனிக்கிழமை செப்டெம்பர் 04, 2021 | ஒளி: 07 கதிர்: 93 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## 12 ரூபாயால் கோதுமைமா கூடியது



ஒரு கிலோகிராம் கோதுமைமா 12 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது என பிரிமா நிறுவனம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம் அறிவித்துள்ளது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவை 87 ரூபாய்க்கு விற்பனை செய்யவேண்டும். இந்நிலையிலேயே, மேற்கண்டவாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என அவ்வியக்கம் சுட்டிக்காட்டுள்ளது.

இந்நிலையில், அந்த விலை அதிகரிப்புக்கு கடுமையாக எதிர்ப்பை வெளியிடுவதாகவும் அவ்வியக்கம் தெரிவித்துள்ளது.

---

நியூசிலாந்தில் கத்திக்குத்து தாக்குதல் நடத்திய



# இலங்கையர் சுட்டுக்கொலை



### ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர் என அறிவிப்பு

நியூசிலாந்தின் ஒக்லாந்திலுள்ள விற்பனை நிலையமொன்றில், பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்திய இலங்கைப் பிரஜை ஒருவர், அந்நாட்டுப் பொலிஸாரால் சம்பவ இடத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டார். இந்நபர், அங்குள்ள பிரபல சுப்பர் மார்கெட் ஒன்றுக்குள் நுழைந்து சரமாரியாகக் கத்திக் குத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன், இதில் ஆறு பேர் காயம் அடைந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. நேற்று (03) அதிகாலை நடத்தப்பட்ட இந்தக் கத்திக்குத்து தாக்குதலில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதெனத் தெரியவருகிறது.

தொடர்ச்சி P2

---



## ஊடகவியலாளர் பிரகாஸுக்கு அஞ்சலி

■ மு.தமிழ்ச்செல்வன்

கொரோனா தொற்றுக் காரணமாக மரணித்த ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, கிளிநொச்சி ஊடக மய்யத்தின் ஏற்பாட்டில், நேற்று (03) நடைபெற்றது. கிளிநொச்சி ஊடக மய்யத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் ஊடகவியலாளர் அமரர் ஞானப்பிரகாசம் பிரகாஸின் திருவுருவப்படத்துக்கு

தொடர்ச்சி P2

---



## ஊரடங்குச் சட்டம் 13 வரை நீடிப்பு

### மருத்துவ அங்கிகாரத்துடன், பாடசாலை மாணவர்களுக்கும் ஃபைசர்

### ஊடகங்கள் பெரிதுபடுத்திக் காட்டுவதாக கவலை

எதிர்வரும் 6ஆம் திகதி வரையிலும் அமலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை, செப்டெம்பர் 13ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை நீடிப்பதற்கு நேற்று (03) தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

---

## புலிகள் அமைப்புக்கு ஐக்கிய இராச்சியம் தடை

### அரசாங்கம் அறிக்கை



2000ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஐக்கிய இராச்சிய பயங்கரவாதச் சட்டத்தின் கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரீ.ரீ.ஈ) ஒரு பயங்கரவாத அமைப்பாக தடை செய்யப்படுவதற்கு ஐக்கிய இராச்சிய உள்துறைச் செயலாளர் தீர்மானித்திருக்கின்றமை குறித்து இலங்கை அரசாங்கத்துக்கு தெரியப்படு த்தப்பட்டுள்ளது என்று, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

---

## ‘சன்ஷைன் சுத்தா’ சுட்டுப் படுகொலை

பாதாள உலக கோஷ்டியின் உறுப்பினர்களில் ஒருவரான “சன்ஷைன் சுத்தா” என்றழைக்கப்படும் அமில பிரசன்ன ஹெட்டிஹேவா, துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியாகியுள்ளார்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோக சம்பவம், மாத்தறை-வரகாவிட்டிய பகுதியில் நேற்று (03) இடம்பெற்றுள்ளது என பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

---

## நிர்வாண பாலியல் வீடியோ; ஜோடியில் ஒருவருக்கு கொரோனா

பலாங்கொடை, பஹந்துடாவா எல்ல நீர்வீழ்ச்சியில் நிர்வாணமாக பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடும் போது, அவற்றை ஒளிப்பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டவர்களை பொலிஸார் தேடி வலைவிரித்திருந்த நிலையில், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் அவ்விருவரும் நேற்று முன்தினம் (02) கைது செய்யப்பட்டிருந்தனர். மஹரகமையைச் சேர்ந்த 34 வயதான ஆணும், எல்பிட்டியைச் சேர்ந்த 25 வயதான பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த குற்றப்புலனாய்வு பிரிவினர், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

தொடர்ச்சி P2

---



## மயானத்தில் கே.ஜி மீட்பு

■ எஸ்.றொசேரியன்

மன்னார், பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொது மயானத்துக்கு பின் பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட ஒரு தொகுதி கேரளா கஞ்சா, மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 51 கிலோ 250 கிராம் கேரளா கஞ்சாவே கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட கஞ்சா மேலதிக நடவடிக்கைகளின் பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளதுடன், இதனுடன் சம்மந்தப்பட்டவர்கள் மற்றும் கடத்தல் தொடர்பான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

---

பணியில் மரணிக்கும் பொலிஸாருக்கு

## பதவிக்காலம் வரை சம்பளம்

### அமைச்சரவை அனுமதிக்கு முஸ்தீபு



பணியில் இருக்கும் போது, ஒரு பொலிஸ் அதிகாரி மரணித்தால், அவரின் பதவிக்காலம் முடியும் வரை முழு சம்பளத்தையும் அவரது குடும்ப உறுப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரமொன்றை தயாரிக்க அமைச்சின் செயலாளருக்கு, பொது பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் (ஓய்வு) சரத் வீரசேகர அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனா ஒழிக்கும் நடவடிக்கையை முன்னெடுக்கும் போது,

தொடர்ச்சி P2

---

## ரிஷாட்டுக்கு ‘ஹலோ’ கொடுத்த அதிகாரி

சிறைச்சாலையில் விளக்கமறியல் கைதியாக வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியூதீனிடமிருந்து அதிநவீன திறன்பேசி மீட்கப்பட்டது. அந்த திறன்பேசியை வழங்கினார் என்ற குற்றச்சாட்டில், சிறைச்சாலையின் அதிகாரியொருவர் விசாரணைக்குப் பின்னர், வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

---



## பால்மா கேட்டோருக்கு கொரோனா பரிசோதனை

### நிந்தவூரில் பதட்டம்

■ நூருல் ஹுதா உமர்

நிந்தவூரில் உள்ள வெளிநாட்டுத் தயாரிப்பு பால்மா விநியோகஸ்தரின் களஞ்சியசாலை முன்னால் நேற்று (03) திரண்ட பொதுமக்கள், பால்மா தருமாறு கோரி, நீண்ட வரிசையில் மிக நெருக்கமாக காத்திருந்தனர்.

தொடர்ச்சி P2

---

சுகாதாரப் பரிசோதகரை தாக்கிய

## இருவருக்கு விளக்கமறியல்



கிரிபாவ, திபிரிபொக்குன பிரதேசத்தில், பொதுச் சுகாதார பரிசோதகரை தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்கி, அவரின் கடமைக்கு இடையூறு செய்த இருவர், எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

---

## கொரோனாவும் கொன்றது; சீனியும் மக்களை கொன்றது

85 ரூபாயாக இருந்த சீனியின் நிர்ணய விலை தொடர்பான வர்த்தமானியை அரசாங்கம் நீக்கியதன் பிரதிபலனே கடந்த வாரங்களில் சந்தைகளில் சீனியின் விலை 200-250 ரூபாய்க்கு விற்கப்பட்டது எனத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித



தொடர்ச்சி P2

---

## யாழில் எரியூட்டி பற்றாக்குறை

### கொரோனா சடலங்கள் தேக்கம்

■ வி.நிதர்ஷன், எம்.றொசாந்த்



யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக கொரோனா மரணங்கள் அதிகரித்துக் காணப்படும் நிலையில், மேலுமோர் எரியூட்டியை வழங்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக, யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

## உள்ளே

என்ன பழக்கமிது P3

ஆயிரம் தடுமாற்றங்கள் P5

கனவுகள் மெய்ப்படுமா? P5

திரும்பிப் பாருங்கள் P8

PAGE 1 தொடர்ச்சிகள்

# இலங்கையர் சுட்டுக்கொலை

இத்தாக்குதலை நடத்திய இலங்கையர், 2011ஆம் ஆண்டு நியூசிலாந்தில் தஞ்சம் அடைந்துள்ளார் எனவும் இவர், ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர் எனவும், நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் அறிவித்துள்ளார்.

இந்தக் கத்திக்குத்துத் தாக்குதலை ஆரம்பித்த 60 செக்கன்களில் மிகத் துரிதமாகச் செயல்பட்ட பொலிஸாரால், தாக்குதல்தாரி சுட்டுக்கொல்லப்பட்டார் எனவும் நியூசிலாந்து பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்ட நபர், இலங்கையை சேர்ந்த அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருவர் எனவும் கடந்த 5 வருடங்களாக இந்நபரை, நியூசிலாந்தின் பாதுகாப்புத் தரப்பினர் கண்காணித்து வந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெறுக்கத்தக்க, இத்தவறான செயலை செய்த நபர் மாத்திரமே, இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பாளியாவார் எனவும் தாக்குதல் நடத்திய நபர் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் நியூசிலாந்து பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொலிஸாரால் படுகொலை செய்யப்பட்ட அந்நபரின் பெயர் விவரங்களை வெளியிடுவதற்கு, அந்நாட்டு பிரதமர் மறுத்துவிட்டார்.

# ஊரடங்குச் சட்டம் 13 வரை நீடிப்பு

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கூடும் ஜனாதிபதி செயலணி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில், வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று (03) முற்பகல், கூடியது.

தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில், இதன்போது தீர்க்கமாகக் கலந்துரையாடப்பட்டதுடன், 20 - 29 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி செலுத்தல் நடவடிக்கையை, எதிர்வரும் இரண்டு வாரக் காலப்பகுதிக்குள் முன்னெடுப்பதற்கான தேவை தொடர்பிலும், இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் மேற்கொள்ளப்படும் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க உதவிய சுகாதார, பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும், ஜனாதிபதி தனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டார்.

மருத்துவ அங்கிகாரம் கிடைத்தவுடனேயே, பாடசாலை மாணவர்களுக்கு ஃபைசர் தடுப்பூசி ஏற்ற முடியுமென்றும், ஜனாதிபதி தெரிவித்தார்.

நாளாந்தம், 400 - 450க்கு இடைப்பட்ட தடுப்பூசி நிலையங்களில், தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சுகாதாரத் துறையினரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, தடுப்பூசி நிலையங்களுக்கான தடுப்பூசித் தொகை தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும், ஒட்டுமொத்தமாக முன்னெடுக்கப்படும் தடுப்பூசி செலுத்தும் பணிகளைப் புறந்தள்ளிவிட்டு, ஓரிரு தடுப்பூசி நிலையங்களில் இடம்பெறும் சில சம்பவங்களைப் பெரிதுபடுத்திக் காட்டுவதற்கு ஊடகங்கள் முன்னெடுக்கும் முயற்சிகள் கவலைக்குரியனவாக உள்ளனவென்று, மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

தடுப்பூசி ஏற்றலின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றியுடன், புதிய பொதுமைப்படுத்தல் முறைமைக்கு ஏற்ப, நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்வதன் அவசியம் பற்றி, ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

2020ஆம் ஆண்டில் சுமார் 03 மாதங்களாக நாடு முழுமையாக மூடப்பட்டிருந்ததால், வரலாற்றில் முதன் முறையாக, நாட்டின் பொருளாதாரம் எதிர்மறை நிலைமைக்குத் தள்ளப்பட்டது. சிறிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடு எனும் யதார்த்தத்தைப் புரிந்து, பொருளாதாரத்தைப் பாதுகாத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்ல, அனைத்துத் தரப்பினரும் பொறுப்புணர்வுடன் தீர்மானங்களை எடுக்க வேண்டுமென்றும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள போதிலும், தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தின் வெற்றியுடன், ஏற்றுமதித் துறையில் ஈடுபடும் தொழிற்சாலைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடிந்தமையானது, பொருளாதாரத்துக்குக் கிடைத்த பெரிய ஆறுதலாக உள்ளதென்று, நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலகின் பல நாடுகள், சுற்றுலாத் துறைக்காகத் தமது நாடுகளைத் திறந்துகொண்டிருக்கின்றன. அவ்வாறானதொரு தீர்மானத்தைத் தாமும் எடுப்பதன் மூலம், சிறந்த பயன்களை அடைய முடியுமென்று, ஜனாதிபதி இதன்போது எடுத்துரைத்தார்.

கொவிட் ஒழிப்பு வேலைத்திட்டத்துக்குச் சமாந்திரமாக, சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்களை உடனடியாக முன்வைக்குமாறு, சுகாதாரத்துறை முக்கியஸ்தர்களுக்கு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

# நிர்வாணமான பாலியல் வீடியோ: ஜோடியில் ஒருவருக்கு கொரோனா

இந்நிலையில், அவ்விருவரும் பொலிஸில் நேற்று (03) ஒப்படைக்கப்பட்டனர். அதன்பின்னர் பொலிஸ் பிணையில் அவ்விருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஆண், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவருடன் நெருங்கியிருந்தார் என அப்பெண் அடையாளம் காணப்பட்டார். ஆகையால், அவ்விருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாமல் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மஹரகம, பமுனுவ பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான, புகைப்படப்பிடிப்பாளர் மற்றும் எல்பிட்டியவைச் சேர்ந்த 25 வயதான பெண்ணுமே பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். அப்பெண் ஓர் அழகுகலை நிபுணர் ஆவார்.

ஆபாச சட்டம் மற்றும் இலங்கை தண்டனைக் கோவைச் சட்டத்தின் கீழ், ஆபாச படங்களைத் தயாரித்தல், உடமையில் வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் அல்லது தரவேற்றம் செய்தல் என்ற குற்றச்சாட்டுகளின் கீழே இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், எதிர்வரும் 16ஆம் திகதியன்று கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் ஆஜராகுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# யாழில் எரியூட்டி பற்றாக்குறை

அக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் நாளொன்றுக்கு அதிகளவிலான சடலங்களை எம்மால் ஏரியூட்டமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்

யாழ். மாநகர ஆளுகைக்கு உள்ள மின் மயான தகனம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணிப்பவர்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு யாழ். மாநகர சபையால் 6,500 ரூபாய் கட்டணம் அறிவிடப்படுகின்றது. எனினும், குறித்த கட்டணத்தை செலுத்த முடியாதவர்கள் தனிப்பட்ட முறையில் என்னைத் தொடர்பு கொண்டால், அவர்களுக்கு உதவ முடியும்.

"யாழ். மாவட்டத்தை பொறுத்தவரையில் கொரோனா தொற்றால் மரணிப்பவர்களின் சடலங்கள், யாழ்ப்பாணம், கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அமைந்துள்ள மின் தகன மயானத்தில் தகனம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த மயானம், யாழ். மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்டது.

"இங்கு நாளொன்றுக்கு 5 சடலங்கள் தகனம் செய்யப்பட்டு வருகின்றன. எனினும், எதிர்வரும் 8ஆம் திகதி வரை சடலங்களை எரிப்பதற்கான முன்பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் வைத்தியசாலையில் அதிகளவிலான சடலங்கள் தேங்கிக் காணப்படுகின்றன.

"நாளொன்றுக்கு அதிகளவிலான சடலங்களை எரியூட்டுவதற்கான தகமை எம்மிடம் இல்லை. அதையும் மீறி நாங்கள் ஒன்று அல்லது இரண்டு சடலங்களை கூடுதலாக ஏரியூட்டும் போது, குறித்த ஏரியூட்டி அடிக்கடி பழுதடையக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

"எங்களுக்கு எரியூட்டி வழங்கப்படா விட்டால் கூட பரவாயில்லை. வேறு ஒரு மயானத்துக்காவது வழங்குங்கள். ஏனெனில், யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்றால் மரணிப்பவர்களை தகனம் செய்ய தற்பொழுது ஒரேயோர் இடம்தான் உள்ளது. தற்போதைய நிலைமையில் இது போதாது" என்றார்.

# புலிகள் அமைப்புக்கு ஐக்கிய இராச்சியம் தடை

தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் தீர்ப்பைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட உள்துறைச் செயலாளரின் தீர்மானமானது, ஐக்கிய இராச்சியத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பொன்றின் விண்ணப்பத்தை நிராகரிக்கின்றது.

எனவே, ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியம் உட்பட உலகெங்கிலும் உள்ள ஏனைய 30க்கும் மேற்பட்ட நாடுகளைப் போலவே, தமிழீழ விடுதலைப் புலிகள் ஐக்கிய இராச்சியத்திலும் ஒரு தடைசெய்யப்பட்ட அமைப்பாக விளங்குகின்றது.

பொதுமக்கள் மற்றும் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை இலக்கு வைத்த கொடூரங்கள் மற்றும் அட்டூழியங்கள், உலகளாவிய மற்றும் பிராந்தியப் பாதுகாப்பை பாதிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் ஏனைய குற்றச் செயல்களில் ஈடுபடுதல் ஆகியவற்றின் காரணமாக இந்த நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஆரம்பத்தில் தடை செய்யப்பட்டது.

உலகளாவிய ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்வதானது, சர்வதேச வலையமைப்பின் மூலம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவியளித்தல், வன்முறைத் தீவிரவாதத்தை நோக்கி இளைஞர்களை தீவிரப்படுத்துதல், இன ஒற்றுமையை சீர்குலைத்தல் மற்றும் அவர்கள் செயற்படும் ஒவ்வொரு நாட்டிலும் ஒருங்கிணைந்த வாழ்க்கையை சீர்குலைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் குறித்த அமைப்பின் எஞ்சிய நபர்களால் தொடர்ந்தும் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தலை எதிர்ப்பதனை அங்கிகரிப்பதாகும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் ஐக்கிய இராச்சியம் மற்றும் அனைத்து அரசாங்கங்களுடனான கூட்டுறவை இலங்கை அரசாங்கம் பாராட்டுவதுடன், குடிமக்களின் உயிருக்கு அச்சுறுத்தலையும், உலகளாவிய மற்றும் பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு ஆபத்தையும் விளைவிக்கும் பயங்கரவாதம் மற்றும் வன்முறைத் தீவிரவாதத்தைத் தணிப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஐக்கிய இராச்சியத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இருவருக்கு விளக்கமறியல்

தாக்குதலுக்கு உள்ளான பொதுச் சுகாதார பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து, இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அசோக்கபுர பகுதியை சேர்ந்த 24 மற்றும் 42 வயதுடைய இருவரே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டு, கல்கமுக நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# ஊடகவியலாளர் பிரகாஸுக்கு அஞ்சலி

விளக்கேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிளிநொச்சி ஊடக மய்யத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் பிரகாஷ் ஞானபிரகாசம், கொரோனா தொற்றுக்குள்ளாகி, கொடிகாமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் (02) மரணித்தார். இறக்கும் போது வயது 26ஆகும்.

விசேட தேவையுடையவரான பிரகாஷ், சமூக வலைத்தளங்களில் செய்திகளை பகிர்ந்து, மக்களுக்கு விரைவாக செய்திகளை வழங்கும் ஒரு செய்தியாளராக திகழ்ந்தார். காணாமல் போனோர், அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற போராட்டங்களிலும் கலந்துகொண்டு, தமிழ் மக்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்த்திருந்தார்.

இந்நிலையில், கடந்த ஐந்து தினங்களாக தனக்கு தலைவலி, இருமல், காய்ச்சல் காணப்பட்டதை அடுத்து, தான் செப்டெம்பர் (01) அன்டிஜன் பரிசோதனை செய்ததாக அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை இட்டிருந்தார்.

இந்தப் பரிசோதனையில் தனக்கு கொவிட் தொற்று உறுதியாகியதாகவும் "குணமடைந்த பின்னர் தடையின்றி, எனது பணிகள் தொடரும். அதுவரை காத்திருங்கள்" என பேஸ்புக்கில் பதிவிட்டு, வைத்தியசாலைக்கு சென்ற ஞானபிரகாசம் பிரகாஷ், இறையடி எய்தினார்.

# பதவிக்காலம் வரை சம்பளம்

நாட்டின் உள்ளக பாதுகாப்புக் குறித்து விழிப்புடன் இருக்குமாறும், பொது பாதுகாப்பு அமைச்சர், பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகளுடன் காணொளி ஊடாக மேற்கொண்ட சந்திப்பில், இந்த விடயங்களை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 11,700 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும், அவர்களில் 28 பேர் மரணித்துள்ளனர் எனவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொரோனா காலத்தில் கூட போதைப்பொருள் மற்றும் பாதாள உலக நடவடிக்கைகள் தலைதூக்க அனுமதிக்கக்கூடாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் 1866ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் சேவை, 155 ஆண்டுகள் பூர்த்தியை நேற்று (13) கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பால்மா கேட்டோருக்கு கொரோனா ரிசோதனை

இந்த மக்கள் நெரிசலைக் கட்டுப்படுத்த முடியாத விநியோகஸ்தரும், அந்த பால்மா விநியோக ஊழியர்களும் வாயிற் கதவை அடைத்து பால்மா விநியோகத்தை நிறுத்தினர். இதனையடுத்து, அங்கு பதற்றம் நிலவியது.

சம்பவ இடத்துக்கு வந்த பாதுகாப்புப் படையினர், பொதுமக்களின் நிலைமைகளை விளக்கி, பால்மா விநியோகம் தொடர்பில் ஒழுங்கான பொறிமுறையொன்றை அமைக்குமாறு, விநியோகஸ்தரிடம் கோரினர்.

எனினும், ஊரடங்கு அமலில் உள்ளமை மற்றும் நிந்தவூரில் கொரோனா தொற்று அதிகமாக உள்ளமை ஆகிய விடயங்களை கவனத்தில்கொண்டு, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரோசா நக்பருக்கு இது தொடர்பில் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ஊழியர்களால் மேற்படி விநியோகஸ்தரின் களஞ்சியசாலை வளாகத்தில் கொரோனா பரிசோதனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

அங்கு வந்த சம்மாந்துறை போக்குவரத்துப் பொலிஸாரும், சம்மாந்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களும் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதன்போது, பால்மா விற்பனையை நிறுத்தி, வர்த்தக நிலையங்கள் ஊடாக பால்மாவை விநியோகிக்க நடவடிக்கை எடுத்தனர்.

இதேவேளை, பால்மா தட்டுப்பாடு காரணமாக அதே வெளிநாட்டுத் தயாரிப்பு பால்மா விநியோக வாகனத்தை காரைதீவில் இடைமறித்த பொதுமக்கள், பால்மா கேட்டு நின்றதுடன், நீண்டநேரப் போராட்டத்தின் பின்னர் அந்நிறுவன ஊழியர்கள் மக்களிடமிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

# கொரோனாவும் கொன்றது சீனியும் மக்களை கொன்றது

இந்த நிலையை உருவாக்கியதும் அரசாங்கம் தான், இதற்கு பொறுப்பு கூற வேண்டியதும் அரசாங்கம் தான். இவ்வாறான நிலையொன்று ஏற்படுமென அரசாங்கம் ஏற்கெனவே அறிந்திருந்தது என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று (3) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

உலக சந்தையில் சீனியின் விலை அதிகரிக்கவில்லை. சீனிக்கான இறக்குமதி செலவு 79 ரூபாய் செல்லும் அதேவேளை, ஏனைய செலவுகள் என 85 ரூபாய்க்கு சீனியை நுகர்வோருக்கு வழங்க முடியும் என்றார்.

இலங்கையில் சீனியை இறக்குமதி செய்யும் 12 நிறுவனங்களுடன் வர்த்தக அமைச்சர் கலந்துரையாடி, சீனியின் விலையை அதிகரிக்கமாட்டோம். இது தொடர்பான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டோம். எனவே பயப்பட வேண்டாம் ஒப்பந்தத்துக்கு அமைய தான் சீனி விற்பனை செய்யப்படுமென மக்களை ஏமாற்றினார்.

இவ்வாறு கூறியவர் தான் இன்று சினியின் விலையை அதிகரிக்க வாய்ப்பளித்துள்ளார் என்றார்.

அண்மையில் லிட்ரோ சமையல் எரிவாயு விடயத்திலும் இது தான் நடந்தது.

இன்று அவசரகால சட்டத்தின் கீழ், வர்த்தமானியை வெளியிட்டு அத்தியாவசிய சேவை ஆணையாளராக இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரை ஜனாதிபதி நியமித்தார். இவ்வாறு நியமித்து என்ன செய்தார், சீனியின் விலையை அதிகரித்துள்ளார் என்றார்.

இதேவேளை, நாட்டுக்கு எவ்வளவு சீனி தேவை, எவ்வளவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என நுகர்வோர் அதிகாரசபைக்கு அறிந்துக்கொள்ளும் உரிமை உள்ளது. சுங்கத் திணைக்களம் ஊடாக அறிந்துக்கொள்ளலாம்.

இதற்கு யாராவது தகவல் வழங்கிதான் சென்று கைப்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இன்று பாரிய தொகை கைப்பற்றப்பட்டுள்ளது. சீனி விலை அதிகரிப்புக்கு வர்த்தகர்கள் தான் காரணம் என காட்டி, மக்களை ஏமாற்றுவதற்கான காட்சிகளை அரசாங்கம் ஒளிபரப்பு செய்கின்றது என்றார்.




# என்ன பழக்கமிது

சின்னையா செல்வராஜா

மலைப்பாங்கான பிரதேசங்களுக்குச் செல்லும் போது, அதற்கேற்ற ஆடைகளை அணிந்துசெல்லவேண்டும். அங்கிருப்பவர்கள் என்னதான் கோடைக்காலமாக இருந்தாலும், குளிர்காலத்துக்குரிய ஆடைகளை அணிந்திருப்பர். அவ்வளவுக்கு அங்கு வீசும் காற்று சாரலுடன் சேர்ந்து முகத்தில் பட்டுத்தெறிக்கும் போது 'ஜில்' என்று இருக்கும்.

நீர் வீழ்ச்சிகளில் இருந்து பரந்துவரும் தூவானம் முகங்களில் பட்டால், உடலே சிலிர்க்கும். அங்கிருக்கும் நீர்நிலைகளில் கை,கால்களை வைத்தால் சுரென இழுக்கும் அந்தளவுக்கு குளிர் நிறைந்திருக்கும். அவ்வளவு இயற்கை ரம்மியத்தை கொண்டிருக்கும் ஒவ்வொரு நீர்வீழ்ச்சிகள், நீர்நிலைகளில் அழகுதான்.

அங்கு செல்கின்ற சிலர், வழுக்கிவிழுந்து மரணித்துள்ளனர். இன்னும் சிலர், தன்னுயிரை மாய்த்துக்கொள்கின்றனர். காதலில் தோல்வியடைந்த பலரும், வாழ்வின் விரக்தியில் இருக்கும் பலரும், வாழ்க்கையே பூஜ்ஜியமாகிவிட்டது என நினைத்து, தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்கின்றனர். இவையெல்லாம், அந்த நீர்வீழ்ச்சி, நீர்நிலையில் இருக்கும் அழகையே கொன்றுவிடுகின்றனர்.

எத்தனை உயிர்களை இந்த நீர்வீழ்ச்சியும் நீர்நிலைகளும் தன்னகத்தை இழுத்துக் கொண்டுள்ளன எனக் கேள்விப்படும் பலரும், அந்தப் பக்கங்களுக்கே செல்லமாட்டார்கள். ஆனால், இவையெல்லாம் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்குத் தெரியாது. அதனால், அவர்கள் இயற்கையை ரசித்து மகிழ்வர்.

அவ்வாறெல்லாம் பெயர்பெற்று போனதுதான் பலாங்கொடை, பஹந்துடாவா எல்ல நீர்வீழ்ச்சி. ஆனால், அவ்விடத்துக்குச் சென்ற ஆணொருவரும், பெண்ணொருவரும் நிர்வாணமாக இருந்து பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடும் காட்சிகளும் வீடியோக்களும் சமூக வலைத்தளங்களில் அண்மையில் பரவியிருந்தன. அவை, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களின் பார்வையையும் இழுத்துவிட்டது.

பாலியல் தொடர்பிலான காட்சிகள் அடங்கிய காணொளிகள், புகைப்படங்களை இணையத்தளங்களில் பார்ப்பது, இந்த கொரோனா முடக்க காலத்தில் அதிகரித்துவிட்டது.

பிரபலங்கள் கூட, பாலியல் காட்சிகளை தரவேற்றி, பெருந்தொகையில் சம்பாதித்துகொள்கின்றனர். அந்தவகையில், பஹந்துடாவாவில்



பல கோணங்களில் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த அந்த ஜோடியின் காட்சிகளை பார்க்கும் போது, கண்களை மூடிக்கொண்டாலும் காட்சிகள் கண்முன்னே, நிழலாய் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. அந்தளவுக்கு அலங்கோலமானது.

விடயம் வெளிச்சத்துக்கு வந்ததன் பின்னர், இலங்கை பொலிஸ் கணினிப்பிரிவு அவற்றை முழுமையாக அகற்றியுள்ளது. ஆகையால், அக்காட்சிகளை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் இனியும் இல்லை. எனினும், இவ்வாறு உடம்பில் ஒரு துண்டு துணியில்லாம் நிர்வாணமாக இருந்து பாலியல் செயல்களில் ஈடுபட்டு, ஒளிநாடாவை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்திருந்த ஜோடியை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

மஹறகமவில் வைத்து கைதுசெய்யப்பட்ட அந்த ஜோடியில் ஆணுக்கு 34 வயதும் அப்பெண்ணுக்கு 25 வயதும் என தெரிவிக்கப்படுகின்றது. எனினும், அவ்விருவரின் உடல் அமைப்புகளைப் பார்க்குமிடத்து, ஆண் 25 வயதான தோற்றத்தை கொண்டவராவும் பெண்ணே 34 வயதான தோற்றத்தை கொண்டவராகவும் காணப்படுகின்றனர்.

மஹறகமவை சேர்ந்த ஆணும், எல்பிட்டியைச் சேர்ந்த பெண்ணுமே இவ்வாறு, நாடே முடக்கப்பட்டிருக்கும் இக்காலத்தில், மரங்களையும் நீர்வீழ்ச்சியையும் சாட்சிகளாக வைத்து, தூவானம் வெற்று மேனிகளில் பட்டு சிலிர்க்க அந்தரங்கங்களை அம்பலமாக்கி, ஊர் சிரிக்கச் செய்துள்ளனர்.

பலபிட்டியவைச் சேர்ந்த அந்தப் பெண், மஹகரம பிரதேசத்தில் தங்கியிருந்து, இவ்வாறு அவ்வப்போது, நிர்வாணமாக பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடும் காட்சிகளை சமூக வலைத்தளங்களில் தரவேற்றியுள்ளார் என்றும் இதுவரையிலும் 50க்கும் குறைவான அவ்வாறான வீடியோக்களை ஒளிப்பதிவுச் செய்து ஏற்றியுள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

சமூகவலைத்தளங்களின் ஊடாக வீடியோக்களை ஏற்றி சம்பாதிக்கும் முறைமையை பலரும் கையாண்டு வருகின்றனர். பலவற்றை பார்ப்பதற்கே அருவருப்பாக இருக்கிறது. இன்னும் சிலவற்றை குடும்பத்தினருடன் இருந்து பார்க்கவே முடியாது. சில, நேரத்தை வீணாடிக்கும் செயற்பாடாகவே உள்ளது.

வெளிநாடுகளில் (prank) அதாவது குறும்பு, சேட்டை எனும் தலைப்புகளில், வீடியோக்கள் தரவேற்றம் செய்யப்படுகின்றன. இந்தியாவில் அதிகரித்துவிட்டது. அதில் பல, சமூகத்துக்கு நல்ல பல கருத்துகளை சொல்பவையாக சில வீடியோக்கள் இருந்தாலும், உணவுகளில் எச்சில் துப்பி கொடுப்பது, உடலமைப்பை விமர்சிப்பது, கைகளை ஓங்கி சண்டைப்பிடித்துக்கொள்வது, கோபத்தை ஏற்படுத்தும் வகையிலான வசனங்களுக்கு பஞ்சமே இல்லை.

சமூகத்துக்கு நல்ல கருத்துகளை சொல்லபோய். இறுதியில், கொடூரமான காட்சிகளை அவை காண்பிக்கின்றன என்பது வேதனையளிக்கிறது. சில செனல்களில், சிறுவர்களை வைத்து இவ்வாறு குறும்பு செய்யப்படுகின்றது. அவையெல்லாம் தவிர்க்கப்படவேண்டும்.

சமூக வலைத்தளங்களில் வீடியோக்களை ஏற்றி சம்பாதிக்கும் சிலரின் பின்னால் பலரும் சென்று, அவர்களை பார்த்து 'போலச் செய்தல்' போல பின்பற்றுவதையும் அவதானிக்கமுடிகின்றது. ஒவ்வொரிடத்திலும் ஒவ்வொரு திறமைகள் இருக்கின்றன. அத்திறமைகளை வெளிக்காட்டவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமே இல்லை.

கொரோனா வைரஸ் காலத்தில் முடக்கத்துக்கு வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் பலரும், அலைபேசியே கெதியென கிடக்கின்றனர். அவ்வாறானவர்கள் எழுதில் வீழ்த்தவேண்டுமாயின் வீடியோவே சிறந்ததோர் ஆயுதமாகும்.

அந்த ஆயுதத்தை மேலே குறிப்பிட்ட ஜோடி, பலாங்கொடை பஹந்துடாவாவில் தவறாக பயன்படுத்தியுள்ளது. இது இளம் சமூதாயத்தினரை தீய வழிக்கு இழுத்துச் செல்லும். ஆகையால், வீடியோக்களை பார்ப்பவர்கள் தேர்ந்தெடுத்து பார்க்கவேண்டும். ஏற்றுவோர், பல கோணங்களிலும் சிந்தித்து ஏற்றவேண்டும். இல்லையேல், ஜோடி மட்டுமன்றி, குடும்பமும் சமூகமும் ஏன், நாடே நிர்வாணமாகிவிடும் என்பது மட்டுமே உண்மையாகும்.






## தகவல் கொடுத்த

# குரங்கு

முன்னைய காலங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் பறவைகள், மிருகங்கள், வீடுகளுக்கு வரும் திருடர்களை காட்டிக்கொடுக்கும் என்றும், சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடும்போது, பொலிஸ் காரர்கள் வந்தால், மைனா விசில் அடித்து சமிக்ஞையை கொடுக்கும் என்றும் கூறுவர்.

வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகள், வீட்டிலிருப்போருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படபோகிறது என்றால் முன்கூட்டியே, ஏதாவது ஒரு சமிக்ஞையை காட்டும். சிலவேளைகளில் வீட்டின் உரிமையாளர். அல்லது அந்த பிராணியை வளர்த்தவர் மரணிக்கப்போகின்றார் என்றால், முன்னரே மரணித்துவிடும் அல்லது, பின்னர் மரணித்துவிடும்.

மாவனெல்லையில் அண்மையில் ஏற்பட்டிருந்த மண்சரிவுக்கு, ஒரு குடும்பமே தாண்டு மரணித்துவிட்டது. சேறு கலந்த அந்த மணிசரிவுக்குள், சடலங்கள் எங்கே புதைந்திருக்கின்றன என்பதை மீட்பு பணியாளர்களால் இனங்காணமுடியவில்லை.

சேறு நிறைந்த அந்த மண்மேடுக்கு நாயொன்று வந்து தனது கால்களால் ஒரிடத்தை தோண்டியுள்ளது. அங்கிருந்தவர்கள், அந்த நாயை துரித்தி,துரத்தி விட்டனர். ஆனால், மீண்டும், மீண்டும் அந்தநாய் சேறு நிறைந்த மண்திட்டுக்கு சென்று அதே இடத்தை முன்னங் கால்களால் தோண்டியுள்ளது.

அதனை நன்கு அவதானித்த அங்கிருந்தவர்களில் ஒருவர், நாய் அடிக்கொருதடவை தோண்டிய இடத்தை மையப்படுத்தி அகழ்வு பணிகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொண்டார். அங்கிருந்த அகழ்வு பணியாளர்களும் அவ்வாறே செய்தனர்.

இறுதியில், நாய் தோண்டிய இடத்துக்கு சரியாக கீழே, வீடும் வீட்டுக்குள் அந்த குடும்பத்தினரின் சடலங்களும் இருந்துள்ளன. இவ்வாறு பல பிராணிகள், சில சமிக்ஞைகளை காட்டும். அவ்வாறுதான், காடுகளில் வாழும் குரங்குகளும், எவ்விதமான முன் பழக்க வழக்கங்களும் இல்லாத அதிகாரிகளுக்கு சமிக்ஞை கொடுத்துள்ளன.

அவ்வாறு குரங்குகள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே வரலாற்று சிறப்புமிக்க மிஹிந்தலை புனித பூமியின் தொல்பொருள் வனத்தில் அமைந்துள்ள அரச பரம்பரைக்குரிய கற்குகையொன்றில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓகஸ்ட் 31ஆம் திகதி காலைப் பொழுதில், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக சிலர் நடமாடுவதாகவும் குறித்த வனத்திலிருந்து வித்தியாசமான சத்தங்கள் கேட்பதாகவும் மிஹிந்தலை தொல்பொருள் பிரிவுக்கு பொறுப்பான அதிகாரி மஞ்சுள ரஸ்னாயக்கவுக்கு நபர் ஒருவர் தகவல் வழங்கியுள்ளார்.

இதற்கமைய, செயற்பட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் தொல்பொருள் வனத்தின் பிரதான பாதுகாவலர் பி.டி.ரஞ்சித் மற்றும் 2 பணியாட்களுடன் ராஜகிரி லென் சங்கீர்ன பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அதன்போது, களுதிய குளத்துக்கு திரும்பும் சந்தியில் மோட்டார் சைக்கிளுடன் இருவர் நின்றுகொண்டிருந்த்தை அவதானித்த பணியாட்களில் ஒருவர், அவர்களிடம் சென்று, கட்டு சேயவுக்கு அருகில் வனத்துக்குள் செல்வது குறித்து வினவியுள்ளார்.

கட்டு சேயவிலிருந்து 500 மீற்றர் தூரம் வனத்துக்குள் சென்றாலும் எவ்வித சம்பவங்களும் அவர்களது கண்ணுக்குப் புலப்படவில்லை.

எனினும் அந்த பிரதேசத்தில் மறைந்திருந்து அவதானித்த தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கண்ணுக்கு, குரங்கொன்று திடீரென்று கலவரமடைந்து வித்தியாசமான குணாதிசயங்களை வெளிப்படுத்தியுள்ளது.

இதனை கவனமாக அவதானித்த அதிகாரிகள் குரங்கு ஒரு திசையை நோக்கி ஏதொ ஒன்றை காட்ட முயற்சித்துள்ளதை கண்டுள்ளனர்.

குரங்கு குறித்த திசையை நோக்கி ஏதோ ஒரு செய்கையை வெளிப்படுத்தியதை அவதானித்த போது, அங்கு கற்குகையொன்றை கண்டுள்ளனர்.

அத்துடன், அக்குகையிலிருந்து புதையல் தோண்டும் சத்தத்தையும் உணர்ந்த்துடன், "அதோ யாரோ வருகின்றனர்" என்ற சத்தத்தையும் கேட்டுள்ளனர்.

இதன்போது குறித்த குகையிலிருந்து பலர் பாய்ந்து தப்பியோடியுள்ளனர்.

பின்னரே உயரமான மரத்திலிருந்த குரங்கு கொள்ளையர்கள் சிலர் உணவு உண்ட இடத்தை அடையாளம் காட்டவே, தன்னால் ஆன முயற்சியை எடுத்துள்ளதை தெரிந்துக்கொண்டனர்.

எனினும், மேலும் சிலர் கற்குகைக்குள் புதையல் தோண்டிக்கொண்டிருப்பதை அவதானித்த தொல்பொருள் அதிகாரிகள் தமது அலைபேசி மூலம் மிஹிந்தலை பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்ததையடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாருடன் தொல்பொருள் அதிகாரிகளும் இணைந்து,வனத்துக்குள் மறைந்திருந்த 11 பேரையும் கைதுசெய்துள்ளனர்.

குரங்குகளின் சமிஞ்சையாலும், அதனை உணர்ந்துகொண்டு செயற்பட்ட அதிகாரிகளாலும் மிஹிந்தலை புனித பூமியின் குகைக்குள் இருந்த தொல்பொருள் காப்பாற்றப்பட்டன. இல்லையேல், பெறுமதிமிக்கவை சுரண்டப்பட்டிருக்கும்.

இந்தச் சம்பவத்தை பார்க்கும் போது, எமது பரம்பரையை வந்தமைக்கும் ஓர் அர்த்தம் கற்பிப்பவையாகவே இருக்கும். தங்களுக்கு தகவல் கிடைத்த மூலம் வெளியாகியுள்ளதால், தொல்பொருள்களை தோண்டி எடுப்பதிலேயே குறியாக இருப்பவர்கள் விழிப்படைந்துவிடுவர் என்பதில் ஐயமில்லை. எனினும், சிறு சமிஞ்சையையும் கவனத்தில் எடுக்கவேண்டும் என்பதையே இச்சம்பவம் பாடம் புகட்டியுள்ளது.





# மரணக்குழிகள்

## வவுனியாவில் கைவிடப்பட்ட கற்குவாரிகளால் உருவான மரணப்பொறிகள்

க. அகரன்

இயற்கை எமக்குக் கற்றுத்தரும் பாடங்களில் முக்கியமான ஒன்று, 'இயற்கையை நீ அழித்தால், இயற்கையால் நீ அழிவாய்' என்பதை, உலக நடத்தைகளை உற்றுநோக்கி அவதானித்தால், அச்சொட்டாக உண்மைதான் என உணரமுடிகிறது.

இலங்கை தேசத்தின் தனித்துவமான பொக்கிசங்களாகத் திகழும் இயற்கை வளங்களை அழிப்பவர்களுக்கு எதிராக இறுக்கமான சட்டங்கள் அமலாக்கப்பட வேண்டும். சட்டங்கள் கடுமையானவையாக இல்லாமையும் அவை சியாயமாக அமல்படுத்தப்பமாமையுமே இற்றைவரை இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இயற்கை வளங்களை அழிக்கும் இலங்கை மாதாவின் புதல்வர்களின் நடவடிக்கைகள், தென்கோடியில் இருந்து வடக்கு வரை நீண்டே காணப்படுகின்றன.

அபிவிருத்திகாக என ஒரு வகைப்படுத்தல் காணப்பட்டாலும் கூட, இவ் அபிவிருத்திக்கான இயற்கை அழிப்புகளுக்கு ஒரு சீரான வரைமுறைகள், வரையறைகள் பேணப்படாமையும் அதிகாரிகளின் அசண்டைத்தனங்களும் இயற்கை அழிவடையும் வேகம் அதிகரித்துச் செல்வதற்கு காரணமாகின்றது.

இவ்வாறான நிலையிலேயே, வவுனியா மாவட்டத்தில் இயற்கை வளங்களின் அழிப்பு, வகைதொகையின்றி இடம்பெற்று வருகின்றது. கல், கிரவல், மணல் என்பன சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அகழப்படுவதுடன் அனுமதித்ததற்கும் அதிகமாகவே தோண்டப்படுவதால், இன்று வவுனியாவில் பல இடங்களில், பெரும் பாதாளங்கள் உருவாகி உள்ளன.

வவுனியாவில் 12 இற்கும் அதிகமாக கல்குவாரிகள் கைவிடப்பட்டும் இயங்கும் நிலையிலும் காணப்படுகின்றன. இவை அரசியல் செல்வாக்கு மற்றும் அரச உயர் அதிகாரிகளின் செல்வாக்கால் செயற்படுத்தப்பட்டு வரும் நிலையில் அவற்றுக்கான அனுமதிகளும் மிக இலகுவாகவே பெறப்படுகின்றன.

இவ்வாறு பெறப்படும் அனுமதிகள் மூலம் சுற்றுச்சூழல் அதிகாரசபை, கனியவளங்கள் திணைக்களம் என்பவற்றின் தடைகளையும் மீறி தோண்டப்படுகின்றது. இவ்வாறு கைவிடப்பட்ட பல கல்குவாரிகள், மரணக் குழிகளாக உருவாகியமை, மனித, கால்நடைகளின் நடமாட்டங்களுக்கு பெரும் ஆபத்தானதாக மாறி உள்ளது.

ஓமந்தை, பம்பைமடு, ஆசிகுளம் சிதம்பரபுரம், கள்ளிக்குளம் என எங்கெல்லாம் நில மட்டத்துக்கு மேலாக மலை போன்ற அமைப்பில் நிலத்தோற்றம் தெரிகின்றதோ, அங்கெல்லாம் கல் அகழ்வதற்கான அனுமதியை பெற்றுவிடுகின்றனர். எவ்வளவு தொகையைக் கொடுத்தேனும், அனுமதியை பெற சிலர் தயாராகவே இருப்பதற்கு காரணம், அங்கு தாம் செலவு செய்யும் பணத்தைவிட பல மடங்கு அதிகமாகவே வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதாலாகும்.



ஒரு கல்குவாரியை அமைக்கும் போது பல நிபந்தனைகள் உண்டு. குறிப்பாக, கல் உடைக்கும் போது அயலில் உள்ளவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் உடைத்தல் வேண்டும்; வெடி வைத்து உடைப்பது தவிர்க்கப்பட வேண்டும்; நில மட்டத்துக்குக் கீழ் சில அடிகள் மாத்திரமே அகழுதல் வேண்டும்; அவ்வாறு அகழப்பட்ட கிடங்கு, நிரவப்பட்டு நில மட்டத்துக்கு சமப்படுத்தப்பட வேண்டும் என்பன போன்ற பல நிபந்தனைகள் காணப்படுகின்றன.

எனினும், இவற்றில் ஒன்றேனும் பின்பற்றப்படாத நிலையில், வவுனியாவில் சுதந்திரமாக கல் அகழப்படலாம் என்பதனாலேயே அதிகளவானவர்கள் ஆர்வம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். எந்தத் திணைக்களங்களும் அதிகாரசபைகளும் அனுமதி வழங்கியிருந்தனவோ, அவை குறித்த பகுதிக்கு சென்று தமது கண்காணிப்பை மேற்கொள்வதில்லை என்பதே உண்மை.

இதன் காரணமாக இன்று, குறித்த கல்குவாரிகள் அமையப்பெற்ற இடங்கள் மழை காலங்களிலும் நீர் ஊற்று உருவாகி நீர்த்தேக்கங்களாக மாறி இருக்கின்றன. இந்த மரணக்குழிகளுக்குள் மாணவர்கள், இளைஞர்கள் குழிகளின் ஆபத்துகளை அறியாமல், தமது பொழுதைப்போக்கும் இடங்களாகவும் குளிப்பதற்கான நீச்சல் தடாகமாகவும் பயன்படுத்த முனைகின்றார்கள்.

கைவிடப்பட்ட கல்குவாரிகளில் நீர் நிறைந்து நிற்கும்போது, அதன் ஆழம், தன்மை தெரியாமல், நீச்சல் தடாகம் என்ற கற்பனையில், அவற்றில் இறங்கும்போது அவை மரணக்குழிகளாக மாறிவிடுகின்றன.

இந்தக் கைவிடப்பட்ட கல்குவாரிகளில் மரணங்கள் பல சம்பவித்துள்ளன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், மாணவர்கள் இருவர் உட்பட நால்வரை பலி எடுத்துள்ளது. 2020இலும் ஒருவரைப் பலி எடுத்துள்ளது. அண்மையில், சிதம்பரபுரத்தில் கைவிடப்பட்ட கல்குவாரியிலும் ஒரு குழந்தையும் சிறுவனொருவனும் விளையாடச்சென்று, நீரில் மூழ்கி பலியாகியிருந்தனர்.

இவ்வாறான நிலை, பம்பைமடுவில் கைவிடப்பட்ட கல்குவாரியிலேயே அதிகளவில் இடம்பெற்று வருகின்றது. பார்ப்போரை கவரக்கூடிய வகையில், வீதியோரத்தில் இயற்கை வனப்புக்கு மத்தியில் அமையப்பெற்றுள்ள குறித்த கல்குவாரி, வெளிப்புறமாக பார்க்கின்றபோது, சிறிய குட்டைபோன்றே காட்சி அளித்தாலும் அதன் ஆழம் சுமார் இரண்டு பனையளவில் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்குமப்பால், ஓமந்தையை ஒட்டிய ஏனைய பகுதிகளில் உள்ள கல்குவாரிகள் கால்நடைகளுக்கும் பெரும் சிம்மசொப்பனமாகவே காணப்படுகின்றன. குடிநீருக்காக கற்குவாரிகளுக்குப் பக்கத்தில் வரும் கால்நடைகள், தவறி விழுந்து உயிரிழக்கும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றது.

சாதாரணமாக, கால்நடைகள் என்ற பார்வைக்கு அப்பால், வறுமையான நிலையில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதாரமாக இருக்கும் கால்நடைகள் இவ்வாறு இறப்பதற்கு, கல்குவாரிகளை நடத்துபவர்களும் நடத்தியவர்களும் செய்யும் அசண்டையான செயற்பாடுகளே காரணம் எனலாம்.

இதற்குமப்பால், ஆசிகுளத்தில் உள்ள கல்குவாரியால் அயலில் உள்ள யேசுபுரம் உட்பட்ட கிராம மக்கள் அன்றாடம் அச்சத்துடன் வாழும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். அங்கு, கல் உடைப்பதற்காக வைக்கப்படும் வெடியின் காரணமாக, அதிர்வுகள் ஏற்படுவதுடன் சுவர்கள் வெடித்தும் சிதறும் கற்களால் அயலில் உள்ள வீடுகளில் வீழுந்து பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

பல மரணங்களுக்கு காரணமாக மாறியுள்ள இவ்வாறான கல்குவாரிகளை, ஆபத்தற்ற பகுதிகளாக மாற்றுவதற்கு திணைக்களங்களோ உள்ளூராட்சி அமைப்புகளோ திட்டமிட்டுச் செயற்படாமை துர்ப்பாக்கியமே!

இச் சூழலில் தொடர்ந்தும் வவுனியாவில் உள்ள பல உயர்வான பகுதிகளில் கல் உடைப்பதற்காக அனுமதி கோரி பல அரசியல் பிரமுகர்களும் செல்வாக்குமிக்கவர்களும் சில அரச உத்தியோகத்தர்களுக்கு அழுத்தம் பிரயோகித்துக்கொண்டே இருக்கின்றனர். இதன் காரணமாக சில அரச அதிகாரிகள் தாமாகவே இடமாற்றம் பெற்று சென்றுவிடலாமா என்ற மன அழுத்தத்திற்கும் உள்ளாகியுள்ளமை யதார்த்தம்.

வவுனியாவின் கல் உடைக்கும் இடங்கள் எல்லாம் மரணக்குழிகளாக மாறி வரும் நிலையில், கிரவல் அகழும் இடங்கள் எல்லாம் காடழிப்பிற்கான பகுதிகளாகவும் நில சமாந்தரத்தன்மையை அல்லது புவியின் சம செயற்பாட்டை மாற்றியமைக்கும் இடங்களாக மாறி வருவது மற்றுமொரு ஆபத்தாக உருவெடுத்துள்ளது.

இவ்வாறான ஆபத்தான மாவட்டமாக வவுனியாவை மாற்றி வருபவர்கள் ஒருபுறமிருக்க, இவ்வாறான செயற்பாடுகளை கைகட்டி வேடிக்கை பார்ப்பவர்களாக அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் மாறியிருப்பது ஏன்? அவர்களுக்குள்ள தொடர்புகள் யாது? என்பது தொடர்பில் சுற்றுச்சூழல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் போது வெளிப்படும் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவ்வாறான விசாரணைகள் இடம்பெறுமா என்பது கேள்வியாகவே உள்ளது.

இதற்குமப்பால் அனுமதியளித்த திணைக்களங்கள் இது தொடர்பில் ஏன் தமது அவதானத்தினை தொடர்ச்சியாக மேற்கொள்வதில்லை என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுமாயின் பல செய்திகளும் இவ்வாறான கல்குவாரிகளுக்கான விடைகளும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.



## மறைந்திருக்கும் வெடிபொருட்கள்:

# இன்னும் அதிரும் மண்





சுப்பிரமணியம் பாஸ்கரன்




இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இடம் பெற்ற உள்நாட்டு போரிலும், போருக்கு பின்னரான காலத்திலும் கண்ணிவெடிகளின் ஆபத்து சவால் மிக்கதாகவே உள்ளது.

குறிப்பாக, இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் நடவடிக்கைகளுக்கு, இவ்வாறான கண்ணிவெடிகளும் வெடிபொருட்களும் பாரிய சவாலாக விளங்குகின்றன. இலங்கையில் மட்டுமல்லாது, உலக நாடுகளிலும் நவீன தொழில் நுட்ப வசதிகள் கொண்ட நாடுகளிலும் இது ஒரு சவாலாகவே உள்ளது.

வெடிபொருட்களால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு பகுதியாக, முகமாலைப் பகுதி காணப்படுகின்றது. யுத்தம் நடைபெற்று, 12 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் தமது சொந்த நிலத்துக்குத் திரும்ப முடியாத நிலையில், பல ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு பகுதிகளிலும், பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு பிரதேசங்களில், உயர்பாதுகாப்பு வலயங்கள், நிலச் சுவீகரிப்புகள், வெடிபொருள் அச்சுறுத்தல்கள் என்பன, இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த நிலங்களில் மீளக்குறியேறாமைக்கான காரணங்களாக அமைகின்றன.

வடபகுதியில், கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முகமாலை, இத்தாவில், இந்திராபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள், தமது சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாது, பலகஸ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

1999ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த காலம் வரையும், அதன்பின்னர் 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் 2008ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிகளில், யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்புகளும் பரஸ்பரம் மோதிக்கொண்ட, கிளாலி முதல் முகமாலை, நாகர்கோவில் வரையான முன்னரங்க நிலை காணப்பட்ட பகுதிகளில், தினமும் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டும் பலர் அங்கவீனர்களாகியும் இருந்தனர். இந்தப்பகுதிகள், போரிட்டோரின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கும் களமாகவும் காணப்பட்டன.

எறிகணைகள், துப்பாக்கி ரவைகள் என்பவற்றால் சல்லடை போடப்பட்டு, எண்ணற்ற உயிர்கள் பறிக்கப்பட்ட ஓர் இடமான முகமாலையிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் அங்குலம் அங்குலமாகவும் சின்னாபின்னமாகவும் வெடிபொருட்கள் விதைக்கப்பட்டன.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறும் வகையில், முகமாலை பகுதியில் வெடிபொருட்களை அகற்றும் பணிகள் கண்ணிவெடிகளை அகற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால், 2010ஆம் ஆண்டு முதல் இன்று வரை, பெரும் சவால்களுக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இங்கிருந்து இடம் பெயர்ந்து, இதுவரை மீள் குடியேறமுடியாமல் வாழ்ந்து வருவோரின் ஒருமித்த குரலாக ஒலிப்பது, “எங்களது சொந்த வீடு இல்லாத துன்பத்தை, கடந்த 25 வருடங்களாக அனுபவித்து வருகின்றோம். 1996ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், முகமாலை, இத்தாவில், இந்திராபுரம் ஊர்களில் இருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்று, தற்போது யாழ்ப்பாணத்தில் வாடகை வீட்டில் வாழ்ந்து வருகின்றோம். நாங்கள் நிம்மதியாக வாழவில்லை; அடிக்கடி வேறுவேறு வீடுகளுக்கு மாறிக்கொண்டுதான் இருக்கின்றோம். இப்போது, இலட்சம் ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து, நாலாயிரம் ரூபாய் வாடகை கொடுக்கின்றோம். 12 ஆண்டுகளாகியும் சொந்த காணிக்குள் கால்பதிக்க முடியாது இருக்கின்றோம். எங்களுடைய காணியை பார்க்க வேண்டும்; எங்களது வீட்டில் குடியிருக்க வேண்டும்” எனத் தமது அவாக்களையும் அபிலாசைகளையும் உணர்பூர்வமாக வெளிப்படுத்தினார்கள்.

அவர்கள், மேலும் விவரிக்கையில், “நாங்கள், உறவினர்களின் காணியில் வசித்து வந்த காலப்பகுதியில், பல துன்பங்களை அனுபவித்து விட்டோம். ‘இரவானால் கிணற்றில் தண்ணீர் அள்ளாதீர்கள்’ என்பார்கள். எங்களது பாவனைக்கு செடிகொடி வைக்கேலாது; ஆடு, மாடு வளர்க்க முடியாது! இப்படி எத்தனையோ கஸ்ரங்களை அனுபவித்து விட்டோம். எனவே, எங்களது காணிகளில் வெடிபொருட்களை அகற்றி எங்கள் காணிகளை விரைவாக விடுவிக்க வேண்டும்” என இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களின் ஆதங்கங்கள் தொனித்தன.

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முகமாலையின் கிழக்கு பகுதி, இதுவரை வெடிபொருட்கள் அகற்றப்படாத மிக ஆபத்தான பகுதியாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில், மீள்குடியேற்றத்துக்கு அடையாளப்படுத்தப்பட்டு, மக்கள் மீள்குடியேறிய பகுதி தவிர, ஏனைய பகுதிக்குள் பொதுமக்கள் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தடைசெய்யப்பட்ட பகுதிகள் மிக ஆபத்தான பகுதிகளாக இருப்பதால், அப்பகுதிகளுக்குள் பொதுமக்கள் செல்வதை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் உரியஅதிகாரிகள் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்ற போதிலும், அந்த அறிவுறுத்தல்களை மீறி, பலர் உட்சென்று விபத்துகளில் சிக்கி, உயிரிழப்புகளை எதிர் கொண்டதுடன் அங்கவீனர்களாகவும் ஆகியுள்ளனர்.

2010ஆம் ஆண்டு, யுனிசெப் நிறுவனம் வெளியிட்டிருந்த செய்திக்குறிப்பில், ‘இலங்கையின், வடக்கில் 640 கிராமங்களில், 105 மில்லியன் வரையான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்றதன் பின்னர், மக்கள் மீள்குடியேறுவதற்கும் பயிர் செய்கைகளை மேற்கொள்வதற்கும் ஏற்ற வகையில் வெடிபொருட்கள் அகற்றப்பட்டாலும், இன்னும் சில பகுதிகளில் வெடிபொருட்களின் ஆபத்துக் காணப்படுகின்றது.

குறிப்பாக, வடபகுதியில் தற்போது மிக ஆபத்தான பகுதியாக, கிளாலி தொடக்கம் முகமாலை, நாகர்வோவில் வரையான பகுதிகள் காணப்படுகின்றன. இதில், முகமாலைப் பகுதியே மிக ஆபத்தான பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்த மக்கள் தமது சொந்த ஊரில் மீள்குடியேறுவதற்குக் காணப்படும் சகல தடைகளும் நீக்கப்பட்டு, குறிப்பாக, வெடிபொருட்கள் அகற்றப்பட்டு, மக்கள் பாதுகாப்பாக வாழ வழிசமைக்கப்பட வேண்டும் என்பதே மனிதாபிமானம் படைத்த எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.







# கனவுகள் மெய்ப்படுமா?

## மலையகத்தின் வளர்ச்சியை, மது தீர்மானிக்கக் கூடாது



சதுராஞ்சலி ஹரிஹரன்

அன்று தொடங்கி இன்று வரையிலுமே பெயர்களும் வடிவமும் மாறியதே தவிர, அதன் தன்மை மாறாத ஒன்றுதான் போதை. ஆசைதான் போதை என்றாலும், அழிவுக்கு வித்திடும் அநாவசிய ஆசைகளையே போதை என்கின்றோம்.

‘மது இல்லாத மலையகம்’ காலம்காலமாய் எமக்குள் நீளும் ஓர் எதிர்பார்ப்பு. போதைப்பொருள் பாவனையும் மதுப்பாவனையும் மலையக வளர்ச்சிக்கு இன்றுவரை பெரும் முட்டுக்கட்டைகளாகத் திகழ்கின்றன. உலகம் பருக தேநீர் தரும் மலையகம், தன்னால் தானே புதைவதற்கு மதுவையும் ஏற்கிறது.

மலையகம் முன்னேற இன்னும் காலம் தேவை என்பது, பெரும்பாலானோரின் கருத்து. மலையகம், தன் வளர்ச்சி பற்றி மற்றவர்களுக்குத் தக்க பதில் வழங்க இயலாமைக்கு, இந்தப் போதைப்பழக்கமும் காரணமாகவே அமைகிறது.

சட்ட ரீதியாக இயங்கும் மதுபானசாலைகள் இன்றைய தொற்று நோய் பரவல், ஊரடங்கு காலத்தில் மூடப்பட்டாலும், மலையகப் பகுதிகளில் தயாராகும் காய்ச்சி வடிக்கப்பட்ட சாராயம் எனும் ‘கசிப்பு’ உற்பத்தியையும் பெரும்பாலும் காணமுடிகின்றது.

அடிமைப்படுத்தப்படுகிறோம் என்று ஒருசாரார் குமுறிக் கொண்டிருக்கும் காலத்தில், மதுப்பழக்கத்திற்கு அடிமையானதிலிருந்து மீள முடியாமல் பல்வேறு ஆபத்துகளையும் பொருட்படுத்தாமல் குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்களும், ஒருபுறம் இருக்கத் தான் செய்கிறார்கள்.

மரக்கறி விலைகளின் அதிகரிப்பின் போது அங்கலாய்த்துக்கொள்பவர்கள், ஒருபோதும் வீட்டுக்கொரு வீட்டுத்தோட்டத்தின் அவசியத்தை உணர்வதில்லை. ஆனால், மதுபானசாலைகள் மூடப்படும் போது, சுயமாகவே அதை உற்பத்தி செய்வது பற்றி சிந்திக்கிறார்கள் அல்லவா? வேரோடு வெட்டி வீழ்த்திவிட முடியாத ஒரு பிரச்சினைதான் இது. ஆனால், இந்தப் போதைப்பழக்கம் அடிப்படை தேவையொன்றல்ல என்பது மட்டுமே உண்மை.

அரசியல்வாதிகளின் தலையீடும் மதுபான விற்பனையில் உண்டு என்ற கருத்தும் மலையகத்தில் நிலவுகின்றது. ஆனால், தனது குடும்பத்தின் தேவை பற்றியும் தனது உடல் சார்ந்த அக்கறை பற்றியும் சிந்திக்கும் எந்த ஓர் ஆணுக்கும் இதர சக்திகளின் தலையீடு இரண்டாம்பட்சம்தான்.

இன்று மலையக நகரங்களில் மதுபான கடைகளில் சிலருக்கு கணக்கும் பேணப்படுவதாக தெரிகிறது. வேதனப்பற்றாக்குறையில் வாடும் ஒரு குடும்பத்தலைவன் எவ்வாறு மதுபான கடைகளில் மட்டும் தனக்கென ஒரு கணக்கைப் பேணுகிறார் என்பதைப் பற்றிச் சிந்திக்கும்போது, மலையகத்தின் விடிவு நோக்கிய எதிர்பார்ப்புகளும் சிதைந்து போகின்றன.

சாராயம், கள், கசிப்பு, புகையிலை என்று பட்டியலிடும் மலையக போதைப்பொருள் கலாசாரத்துடன், இன்றைய இளைஞர்களால் கஞ்சாவும் ஹெரோயினும் இணைத்து எடுத்துச் செல்லப்படுகின்றன.

பாடசாலை காலங்களிலேயே சிகரெட் பாவனையை தொடங்கி விடுவதால், மதுப் பழக்கத்துக்கு அடிமையாவதும் இலகுவானதொன்றே! கல்வியை இடைவிட்டு, நகர்ப்பகுதி நாடி வேலைக்குச் செல்வதால்,தேவையான சுதந்திரத்தையும் அவர்களால் பெறமுடிகின்றது. பெற்றோர் விழித்துக்கொள்வதற்கு முன்னர் இளைய சமுதாயத்தினர் போதை வலைக்குள் மாட்டிக்கொள்கிறார்கள்.

கிராமிய பூஜை முறைகளிலும் மதுவுக்கு இடமுண்டு என்பதால், மதுப்பழக்கம் தவறு என்பதைக்கூட அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வீட்டு வன்முறை தொடங்கி, வீணான சண்டை சச்சரவுகளையும் மதுப்பழக்கம் ஏற்படுத்தி விடுகின்றது.

உடல் சோர்வுக்காய் தினமும் மதுக் குடிப்பது அவசியம் என்கிறார்கள் மதுப் பிரியர்கள். “உடலுக்கு இயற்கையாக அற்ககோல் தேவை; அதனால் மது அவசியம்” என்றும் ஆண் என்பவன் போதைப் பழக்கத்தை ஒரு தடவையாவது அனுபவிக்க வேண்டுமென்றும் அவர்கள் தமது தவறை நியாயப்படுத்துகிறார்கள். இந்தச் சந்தர்ப்பங்களின்போது, கோபத்தையும் தாண்டி, அவர்கள் மீது ஒருவித பரிதாபமே எழுகிறது.

பெண்கள், ஆண்கள் என்ற பாகுபாடின்றி வெற்றிலை, புகையிலை மெல்லும் பழக்கமும் மலையகத்தில் அதிகமாகவே காணப்படுகின்றது. இன்று மலையகத்தில் வாய்ப் புற்றுநோய் அதிகரித்ததற்கான காரணமும் இதுதான். போதைப் பொருள் சார்ந்த நோய்கள் குறித்தான தெளிவும் மலையக மக்களிடம் குறைவே!

நுரையீரல் புற்றுநோய், ஈரல் நோய், கல்லீரலின் செயற்பாடு குறைதல், சுவாசக் கோளாறுகள் என எந்த நோயால் சாகிறோம் என்று கூடத் தெரியாமல் மரணிக்கும் எத்தனை நபர்களை இன்று நாம் காண்கிறோம். சொற்ப சுகத்துக்காக முழுக் குடும்பத்தின் எதிர்காலம் பற்றிக்கூட, அவர்கள் சிந்திக்க மறந்து விடுகிறார்கள்.

போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாரிய நோய்களில் இருந்து மீள்வதென்பது கடினமான விடயமே! மேலும், பாரிய நோய்களுக்கும் புற்றுநோய்க்கும் உரிய சிகிச்சைகளை பெறுவது சவாலான விடயமாகவே அமைகிறது.

போதிய வசதியின்மை, நகர்ப்பகுதி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறவேண்டிய நிலைமை, நோய் அறிகுறி பற்றிய போதிய தெளிவின்மை காரணமாக இறக்கும் நோயாளிகளும் ஏராளம். இவர்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை வீதியில் விட்டுச் செல்கிறார்கள் என்பதுதான் கவலை.

குடும்ப வறுமையில் செலவுகளை ஈடுசெய்ய முடியாமல், தான் பெற்ற பிள்ளைகளையே பாடசாலை இடைவிலக்கி வேலைக்கு அனுப்பும் பெற்றோர்கள், என்றுமே வறுமையைக் காரணம்காட்டி குடிப்பழக்கத்தையும் வெற்றிலை பழக்கத்தையும் விடுவதில்லை.

நகர் பகுதி மக்களைக் காட்டிலும் மந்த போசணை அதிகம் உடையவர்கள் மலையகத்தவர்கள். போதைப்பொருளுக்காய் செலவழிக்கும் ஒரு தொகை பணத்தை குறைந்தது சிறந்த உணவை உட்கொள்ளவாவது பயன்படுத்தும்போது உங்கள் சந்ததிகளும் வலுப் பெறுகின்றன என்பதை உணருங்கள்.

பெரும்பாலும், மலையக நகரங்களில் குறைந்தது ஐந்து மதுபானசாலைகளாவது காணமுடிகிறது. வெற்றிலை, சிகரெட், மது என்று எல்லா போதைப்பொருட்களும் தோட்ட பகுதியிலேயே விற்பனையும் செய்யப்படுகின்றன. ஆனால், குறைந்தது ஒரு புத்தக விற்பனை நிலையமாவது நகர்ப்பகுதிகளில் காணப்படுகின்றதா என்று எண்ணிப் பாருங்கள். போதைப் பொருள் பாவனையற்ற எத்தனையோ பேர் மலையகத்தில் வாழத்தான் செய்கிறார்கள். அவர்களும் உடல் வருத்தி உழைப்பவர்கள் தான்! ஆனால், உலக நடப்பு உணர்ந்தவர்கள். அதுதான் அவர்களை வளமாக வாழ வழிசமைக்கிறது.

நாகரிகம் என்ற போர்வையில் போதைப் பொருட்களை பயன்படுத்தும் இளையோர்களும் இன்று அதிகம். வளர்ச்சி அடைந்த சமூகமும் நாடும் இதைக் கடைபிடிப்பது தவறல்ல. ஆனால் fashion என்ற போர்வையில் சீரழியும் மலையக இளைஞர்கள், அப்படி என்ன சாதித்து விட்டார்கள் என்பதை மீட்டுப் பார்க்க வேண்டும். அடிப்படை தேவைகளுக்குக்கூட, அனுசரணை நாடி நிற்கும் சமூகம் நம் சமூகம். மற்றைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் வாழ்வியலில் நாகரிகமாக வாழ்கிறோமா என்று சிந்தித்துவிட்டு மதுப்பழக்கத்தை நாகரிகம் ஆக்கிக்கொள்ளுங்கள்; மலையகத்தின் வளர்ச்சியை, மதுவைத் தீர்மானிக்க விடாதீர்கள்.



## தடுப்பூசி:

# ஆயிரம் தடுமாற்றங்கள்



மகேஸ்வரி விஜயனந்தன்
mayurisaai@gmail.com

கொரோனா, இந்த உலகை முழுமையாக ஆட்கொண்டு ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள நிலையில், இதுவரை இந்தக் கொடிய தொற்றை முழுமையாக இல்லாதொழிக்க எவ்வித மருந்துகளும் கண்டுபிடிக்கவில்லை என்று கூறுவதை விட, அதற்காக எடுக்கபட்ட முயற்சிகள் அனைத்தும் கொரோனா வைரஸூக்கு முன்னால் தோற்றுவிடுகின்றன என்பதே உண்மை.

இந்தத் தோல்விகள் அனைத்தும் 21ஆம் நூற்றாண்டின் தொழில்நுட்பம், அறிவியல்சார் சூழ் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மை, முழுமையாக முடக்காமல், கடந்த வாரம் கூட பாம்பின் விஷத்தைப் பயன்படுத்தி கொரோனா தொற்றுக்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்ப டுகின்றமையானது, இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் கண்டிப்பாக இந்தக் கொரோனாவை ஒழிப்பதற்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கையைத் துளிர வைத்துள்ளன.

எனவே, இவ்வாறான மருந்துகளை கண்டுபிடிக்கும் வரை இந்தக் கொரோனாவை தற்காலிகமாகவேனும் மனிதன் ஓரளவுக்காகவாவது மிரட்டி வைக்க வேண்டும் என்பதற்காக, பல தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு, இன்று முழு உலகமே கொரோனா தடுப்பூசியை நாடி ஓடத் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில் தான் இலங்கையிலும் கொரோனா தடுப்பூசியின் அவசியம் உணரப்பட்டு, சிறிது காலம் தாமதித்தேனும், கடந்தாண்டு ஜனவரி மாதம் இந்தியாவிடம் தடுப்பூசிக்கான உதவியை கோரிய போது, சிறிதும் தாமதிக்காமல் பக்கத்து வீடு தானே என்ற நினைப்பில் இந்தியாவின் தயாரிப்பான அஸ்ட்ரா செனிகா ஒன்பதரை இலட்சம் தடுப்பூசிகளை முதன் முதல் இலங்கைக்கு வழங்கி இந்தியா உதவிக்கரம் நீட்டியது.

தமக்கு தொடர்ச்சியாக இந்தியா உதவிக்கரம் நீட்டும் என்ற நம்பிக்கையில் காத்திருந்த எமக்கு, திடீரென இந்தியாவில் தொற்றின் நிலை அதிகரித்ததால், ஏனைய நாடுகளுக்கு எஸ்ட்ரா செனிகா அனுப்புவதை இந்தியா இடைநிறுத்தியதையடுத்து, இலங்கை பாரிய சிக்கலுக்கு முகம்கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதனால் முதற்கட்டமாக முதலாவது டோஸை செலுத்திக்கொண்ட 3இலட்சத்துக்கு அதிகமானவர்களுக்கு இரண்டாவது டோஸ்க்காக 6 மாதங்கள் காத்திருந்து மிக அண்மையிலேயே ஜப்பானின் உதவியுடன் இரண்டாவது டோஸை செலுத்திக்கொண்டனர்.

ஜப்பானைத் தொடர்ந்து இலங்கையின் உற்ற நண்பனான சீனா, தடுப்பூசி விடயத்தில் பாரிய ஒத்துழைப்பை வழங்கி வருவதுடன், இதுவரை 22 மில்லியன் சினோஃபாம் தடுப்பூசியை இலங்கைக்கு வழங்கியுள்ளது. சீனா மாத்திரமின்றி அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளும் அந்தந்த நாடுகளின் தயாரிப்பிலான தடுப்பூசிகளை இலங்கை வாரி வழங்கி வருவதால் தான் இந்த தடுப்பூசி செலுத்தும் செயற்பாட்டில் சர்வதேச அளவில் இலங்கை முன்னணியில் இருப்பது இலங்கையர்களான எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

மேலும் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் இராணுவத்தினரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், விரைவாக இப்பணிகள் நிறைவடைந்து வருவதற்கான மற்றுமொரு காரணமாகும்.

இதற்கமைய, தடுப்பூசி வழங்கும் முன்னுரிமைப் பட்டியலில் சுகாதாரப்பிரிவு, முப்படையினரை அடுத்து 60 வயதினரே காணப்படும் நிலையில், இதுவரை 60 வயதுக்கு மேற்பட்ட 55 சதவீதமானவர்களுக்கு இரண்டு டோஸ்களும் ஏற்றப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், 60 வயதுக்கு மேற்பட்டு தடுப்பூசி நிலையத்துக்கு செல்வதில் சிக்கலை எதிர்நோக்கியுள்ளவர்கள், நீண்ட நாள் நோய்வாய்பட்டவர்களுக்கு அவர்களது இருப்பிடங்களுக்கே சென்று தடுப்பூசி செலுத்தும் மகத்தான பணியை இணுவத்தினரின் உதவியுடன் சுகாதார பிரிவு முன்னெடுத்துள்ளமை வரவேற்கத் தக்க விடயமாகும். குறிப்பாக இத்திட்டம் பெருந்தோட்ட பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவது அதிலும் சிறப்பான விடயமாகும்.

மேலும் 20-30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கும் தடுப்பூசி செலுத்துவது மிக மிக அத்தியாவசிமானதென உணரப்பட்டு, குறித்த வயதினருக்கு பைசர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஹம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் (2) ஆரம்பித்து வைக்கப்பட்டதுள்ளதுடன், எதிர்வரும் நாள்களில் இது நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை நேற்று முன்தினம் (2) வரையான தரவுகளுக்கு அமைய, ஏதாவதொரு தடுப்பூசியின் முதலாவது டோஸ் 1,25,64,206 பேருக்கும் இரண்டாவது டோஸ் 85,82,094 பேருக்கும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ள நிலையில், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 3 இலட்சம் பேர் இதுவரை எவ்வித தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொள்ளவில்லை என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது..

இவ்வாறான நிலையில், பல நாடுகள் தடுப்பூசியை வழங்கி இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டினாலும் எப்போதும் எதிர்கட்சி குற்றஞ்சுமத்துவது போல் தடுப்பூசி விடயத்தில் உரிய முகாமைத்துவம் இல்லை என்பது அடிக்கடி அரசாங்கம் மற்றும் சுகாதார தரப்பினரின் செயற்பாடுகளும் ஆங்காங்கே பதிவாகும் பல சம்பவங்களும் உணர்த்தி வருகின்றன.

“கிடைக்கும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வது உங்கள் உயிர்களைப் பாதுகாக்கும் எனவே, இன்றைய காலத்தில் கொரோனா தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதை உங்கள் கடமைகளில் பிரதான ஒன்றாக மாற்றிக்கொள்ளுங்கள்” என அனைத்து ஊடகங்கள், சமூக வலைத்தளங்களில் செய்யப்பட்டு வரும் விழிப்புணர்வு மற்றும் உயிர்வாழ வேண்டும் என்ற ஆசையில் இலங்கையர்கள் ஒவ்வொருவரும் இன்று தடுப்பூசியின் முக்கியதுவத்தை உணர்ந்து தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளச் சென்றாலும் முதலில் கூறிய முகாமைத்துமில்லாத பிரச்சினை காரணமாக பல துரதிஸ்ட சம்பவங்களும் பதிவாகி வருகின்றன.

குறிப்பாக ஒரு பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்காமல், வேறு பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு முன்னரிமையளித்து தடுப்பூசி ஏற்றும் செயற்பாடும் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்குச் சிறந்த உதாரணம் சில மாதங்களுக்கு முன்னர், அஸ்ட்ராசெனிகா இரண்டாம் டோஸை செலுத்திக்கொள்ள மேல் மாகாணத்திலுள்ள பலர் காலிக்கு சென்று ஊடகங்களிடம் அகப்பட்டுக்கொண்ட நிலையில், குறித்த சுகாதாரப் பிரிவுக்கு பொறுப்பான அதிகாரி இடமாற்றப்பட்டிருந்தார்.

அதேபோல் நாட்டின் பல இடங்களிலும் அப்பிரதேசத்தைச் சாராதவர்கள் தடுப்பூசி ஏற்றிச் செல்லப்படும் காட்சிகள் தினமும் காணக் கூடியதாகவுள்ளதுடன், பல இடங்களில் கைகலப்புகளும் ஏற்பட்டுள்ளன.

அத்துடன், மலையத்திலும் ஆரம்பத்தில் தடுப்பூசி தொடர்பான எவ்வித விழிப்புணர்வும் இல்லாமல் இருந்த அம்மக்கள், முதலாவது அலை, இரண்டாவது அலையின் பின்னர், இதன் முக்கியதுவத்தை தாமாகவே உணர்ந்து, தம்மை பாதுகாத்துக்கொள்ள தடுப்பூசி செலுத்தச் செல்வதில் பெரும் ஈடுபாடு காட்டுகின்றனர்.

இவர்களின் ஈடுபாட்டை அடை மழையிலும் குடைகளைப் பிடித்துக்கொண்டு பல மைல் தூரம் கடந்துச் சென்று பல மணி நேரமாக கால்கடுக்க தடுப்பூசிக்காக காத்திருக்கின்றமையை பார்க்கும் போது புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனால், அங்கு பல குளறுபடிகள் ஏற்படுகின்றன. ஏதாவது ஒரு சுகாதார வைத்திய அதிகார பிரிவை மையபடுத்தும் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ளவர்களும் ஒரே நாளில் தடுப்பூசி செலுத்திக்கொள்ள அழைக்கப்படுகின்றனர்.

இதனால் வீண் சிரமத்தை சுகாதாரப் பிரிவினரும் எதிர்கொள்ளும் அதேநேரம், அதிக சனக்கூட்டத்தால் தடுப்பூசி ஏற்றச்சென்றவர்கள், தொற்றுக்கு உள்ளாகும் ஆபத்தும் அதிகரித்துள்ளது.

அத்துடன், இரண்டாவது தடுப்பூசிக்கான திகதி அறிவிக்கப்பட்டவர்கள் குறித்த தினத்தில் சென்றால், அந்த தடுப்பூசி மத்திய நிலையத்துக்கு போதுமான தடுப்பூசிகள் கிடைக்கவில்லை என திருப்பி அனுப்பப்படும் அவலங்களும் கடந்த வாரங்களில் மலையகத்தின் பல இடங்களில் பதிவாகியிருந்தன.

இது மாத்திரமா? இன்று கொரோனாவிலிருந்து பாதுகாக்க வேண்டிய முக்கிய தரப்பினரான கர்ப்பிணிகள் காணப்படும் அதேவேளை, அவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில், கடும் குளிர் , மழைக்கு மத்தியிலும் சுமார் 400க்கும் மேற்பட்ட கரப்பிணிகள் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளும் ஆர்வத்தில் சென்ற வேளை, கர்ப்பிணிகளுக்கான தடுப்பூசி வைத்தியசாலைக்கு குறிப்பிட்ட தினத்தில் கிடைக்கவில்லை என, வைத்தியசாலை தரப்பால் அறிவிக்கப்பட்டதால் அங்கு பதற்ற நிலையொன்று ஏற்பட்டது.

அத்துடன் மலையகத்தில் சில பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு இதுவரை முதலாவது தடுப்பூசி கூட ஏற்றப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

மலையகத்தில் மாத்திரமல்ல நாட்டின் பல இடங்களிலும் இந்த தடுப்பூசி குளறுபடிகள் ஆங்காங்கே பதிவாகி வருகின்றன. இலங்கையில் இதுவரை 12 வயது தொடக்கம் 18 வரையான சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு சுகாதார தரப்பினர் பரிந்துரைக்காத நிலையில், அண்மையில் புத்தளம் பிரதேசத்தில் வைத்தியர் ஒருவரின் 12 வயது மகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டமை பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்தக் குளறுபடிகளுக்கு எல்லாம் மேலாக இந்த வாரம் வெலிகம பிரதேசத்தில் தடுப்பூசி பெற்றுக்கொள்ள சென்ற மக்களை பொலிஸ் அதிகாரியொருவர் தடியால் அடித்து துரத்திய சம்பவம் அனைவரையும் ஆத்திரமூட்டச் செய்துள்ளது.

எனவே, உலக நாடுகளின் உதவியுடன் இலங்கைக்குக் கிடைத்து வரும் தடுப்பூசியின் முழுப் பயனை இலங்கையர்கள் பெற வேண்டுமாயின் இதற்கான முழுமையான உரிய திட்டமிடல்கள், முகாமைத்துவம் அவசியமென்பது வலியுறுத்தப்படுகின்றது.

இதேவேளை, தடுப்பூசி செலுத்திக்கொண்ட எவருக்கும் தொற்று ஏற்படாது என எந்தவொரு வைத்திய நிபுணரோ, உலக சுகாதார ஸ்தாபனமோ இதுவரை உறுதியளிக்கவில்லை. மாறாக, கொரோனா தொற்றுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதில் தடுப்பூசிகள் பெரும் பங்காற்றுவதுடன், தொற்று ஏற்பட்டாலும் உயிர் அச்சுறுத்தல் ஏற்படாதென தெரிவித்துள்ளனர்.

எனவே, வகைகளைத் தேடி அலையாமல், அவை கிடைக்கும் வரை காத்திருக்காமல், எந்தத் தடுப்பூசி எமக்கு கிடைக்கின்றதோ, அது சிறந்த தடுப்பூசி என நினைத்து, விரைவாக தடுப்பூசியை ஏற்றிக்கொள்வது அவசியமாகும். ஏனெனில்ஈ இன்றைய நிலையில், தடுப்பூசி தான் ஆகக் குறைந்த பாதுகாப்பு கவசம் என்பதை உணர்ந்து, எம்மையும் எம்மைச் சார்ந்த உறவுகளையும் பாதுகாப்போமாக!

# அத்தாட்சி அவசியம்; 18 வயதுக்கு மேற்பட்டோர் கவனிக்கவும்

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், செப்டெம்பர் 13ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ள நிலையில், மக்களின் நடமாட்டமும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. ஊரடங்குக்கு இடையில், தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளும் செயற்பாடுகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் ஒக்டோபர் மாத இறுதிக்குள் தடுப்பூசிகளைச் செலுத்தும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்படுமென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள், செப்டெம்பர் 2ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றொழிப்பு களத்தில் முன்வரிசையில் இருந்த, சுகாதார, பாதுகாப்பு தரப்பினர்கள், பொதுச் சுகாதார பிரிவினருக்கு முதலாவதாக தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. அதற்கிடையில், மக்கள் பிரதிநிதிகளுக்கும் செலுத்தப்பட்டன. இராணுவ வைத்தியசாலைகளிலும் தடுப்பூசிகளை செலுத்தும் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டன.

அதன்பின்னர், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், 30 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு செலுத்தப்பட்டது. வீடுகளிலிருந்து தடுப்பூசி மையங்களுக்கு செல்லமுடியாதவர்களுக்கு வீடு, வீடாகச் சென்று தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

இந்நிலையிலேயே 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள், கட்டாயமாக ஏதாவதொரு தொழிலில் இருப்பார்கள்; உயர்கல்வியைப் பயில்வார்கள்; அரச திணைக்களங்கள் உள்ளிட்ட பொது இடங்களுக்குச் சென்றுவரவேண்டியவர்களாக இருப்பார்கள். இதனிடையே, தடுப்பூசியை செலுத்திக்கொண்டமைக்கான அட்டை, செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதிமுதல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என கொவிட் -19 தொற்று பரவாமல் தடுப்பதற்கான ஜனாதிபதி செயலணியின் பிரதானி, இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா அறிவித்திருந்தார்.

பொது இடங்களுக்குச் செல்லும்போது, அவ்வட்டையை எடுத்துச் செல்லவேண்டும்; தடுப்பூசி செலுத்திக்கொண்டமையை உறுதிப்படுத்தவேண்டும். ஆகையால், 18-30 வயதுக்கு இடைப்பட்டோர் கட்டாயமாக தடுப்பூசியை செலுத்திக்கொள்ளவேண்டும்.

தடுப்பூசியை செலுத்திக்கொண்டமை தொடர்பிலான விவரங்களை தனியார் நிறுவனங்கள் பல தரவுகளாக சேகரிக்கின்றன. ஆகையால், தடுப்பூசி வகைகளைத் தேடிக்கொண்டிருக்காமல், கிடைக்கும் தடுப்பூசியை விரைவில் ஏற்றிக்கொள்வதே உத்தமம்.

அந்த வயதுக்கு இடைப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஆரோக்கியமானவராகவே இருப்பார்; தொற்றாநோய்களுக்கும் ஆட்பட்டிருக்கமாட்டார்கள். ஆகையால், எவ்விதமான அச்சமும் இன்றி, தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல், கொரோனா பரவுதலைத் தடுக்கவும் முடியாது; முடக்கத்தை நீடித்து கொண்டே செல்வதையும் தவிர்க்கவும் முடியாது.

இந்த வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள், பலரும் தொழிலுக்குச் சென்றிருப்பார்கள். இக்காலத்தில் வீடுகளுக்குள்ளே முடங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். கால்கள் துருதுருவென இருந்தமையால், வீடுகளுக்குள்ளே முடங்கியிருக்க முடியாது. எதிர்கால சேமிப்பு, தற்கால செலவுகளுக்காக தனது கால்களை ஊன்றி சம்பாதிக்க வேண்டும். ஆகையால், வகைகளைத் தேடாது, கிடைக்கும் தடுப்பூசியை விரைந்துசென்று செலுத்திக்கொள்ள வேண்டும் என்பதே எமது அறிவுரையாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

திருப்தி என்னும் நிலை, விலங்குகள், பறவைகள் உட்பட எல்லா ஜீவராசிகளுக்குமே இருக்கின்றன.

ஆனால், மனிதர்களுக்கு அந்த நிலை இல்லலே இல்லை. ஆசைகள், அநேகரைப் பாதிப்புக்கு உள்ளாக்கி விடுகின்றன. அத்துடன் காழ்ப்பு, கோபம், சுயநலம் எல்லாமே மனிதர்களைத் திருப்தியில் இருந்து விலக்கிவிடுகின்றன.

கடவுள் சிருஷ்டியில் மனிதர்கள் அறிவில் மேம்பட்டவர்கள். அதுவே, அவர்களுக்குள் அது சரியா, இது சரியா என்ற கேள்விகளை உருவாக்கி விடுகின்றது.

செல்வத்தை எவ்வளவு தேடினாலும், மேலும் மேலும் சம்பாதித்தபடியே இரு என்ற எண்ணம் எவரையும் விட்டுவிடுவதில்லை. முன்னேறுவது முக்கியமானது. நிலையான மனவுறுதி, உயிர்கள் மீது இரங்குதல் எனும் தார்மிக சிந்தனை உருவாக வேண்டும்.

தர்மம் ஒருவரை ஆட்கொண்டால், செல்வம் சேரும். நாங்கள் பிறந்தது எமக்கான நலன்களுக்காக மட்டும் அல்ல; உலக நலன்களுக்காகவும் அர்ப்பணிப்புடன் உழைப்பதற்காகவும் கூட!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

### அவசரகால நிலைமை பிரகடனத்தின் இலக்கு

# பொருளாதாரமா, வாழ்வாதாரமா?

லக்ஸ்மன்

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகையில் பிரகடனப்படுத்துவதற்கானதாகவே அவசரகால நிலைமைப்பிரகடனத்தைக் கொள்ளலாம். ஆனால், நமது நாட்டில் அதலபாதாளத்தில் வீழ்ந்திருக்கும் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்துவதற்காக இது பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை , கடந்த சில மாதங்களாகவே வெகுவாக அதிகரித்து வருகின்ற பின்னணியில், அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் விலை உயர்வால் நாட்டு மக்கள் நாளாந்தம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். சீனி, பால்மா, அரிசி, கிழங்கு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு தொடர்ச்சியாகவே தட்டுப்பாடு நிலவி வருகின்றது. விற்பனை செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் பல மடங்காக அதிகரித்துள்ளன.

வர்த்தகர்கள் தம்மிடம் பொருட்கள் இல்லாத நிலைமை காரணமாகத்தான் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் ஏற்படுகிறது என்றே சொல்கின்றனர். உண்மை என்ன என்பது வெளிப்படவே இல்லை.

அன்றாட உணவுக்காக எவ்வளவு விலையையேனும் கொடுக்கத் தயாராக வசதி படைத்தவர்கள் என்ற ஒரு சிறிய சமூகம் இருக்க, இருக்கின்ற பணத்துக்குள் வாழ்க்கையை எப்படி நடத்துவதென்று நடுத்தர வர்க்கத்தினர் சிந்திக்கின்றனர். ஆனால், அதற்குக் கூட வழியில்லாத அடிமட்ட மக்களின் நிலை மிகமிக மோசமாகவே இருக்கிறது.

ஒகஸ்ட் 30 நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் அவசரகால விதிமுறைகளுக்கான வர்த்தமானி அறிவிப்பு செப்டெம்பர் 1ஆம் திகதி வெளியிடப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் உத்தரவுக்கு அமைய, இந்த அவசரகால விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 2வது சரத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அத்தியாவசிய உணவு விநியோகத்துடன், தொடர்புப்பட்ட அவசரகால விதிமுறைகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் அந்நிய செலாவணி நெருக்கடி, கையிருப்பு இல்லாத நிலையில் உணவுப் பொருட்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இதனையடுத்து, உணவு பொருட்கள் பற்றாக்குறை தொடர்பான அவசரநிலை அறிவிக்கப்பட்டது.

'ஜனாதிபதியின் கட்டளையின் பிரகாரம்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில், நாடு பூராவும் வெகுசீக்கிரமாகப் பரவிகொண்டிருக்கும் கொவிட்-19 நிலைகளின் பிரகாரம், இலங்கையில் பொதுமக்கள் அவசரகால நிலைமை ஏற்பட்டிருப்பதை கருத்தில்கொண்டு, மக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் நிலைமையை பாதுகாப்பதற்காக, மக்களின் வாழ்க்கைக்குத் தேவையானதை விநியோகிப்பதற்காக, சேவைகளை வழங்குவதற்காக, இது முக்கியமான தருணமாகும். ஜனாதிபதியாகிய எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம் மற்றும் கட்டளையின் பிரகாரம், அத்தியாவசிய பொருள்களை விநியோகம் செய்வதற்காக அவசர கால நிலைமை நாடளாவிய ரீதியில் ஒகஸ்ட் 30ஆம் திகதி முதல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைப் பலரும் பல விதமாக விமர்சித்திருக்கின்றனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பியுமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், நாட்டில் பிறப்பிக்கப்பட்டிருக்கும் அவசரகால நிலைமையின் ஊடாக, ஜனாதிபதி ஆட்சியே நடக்கும். ஜனாதிபதி தான்விரும்பிய படி அவசரகால விதிமுறைகளை வகுக்கமுடியும். இச்செயற்பாட்டை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

2003ஆம் ஆண்டு 9ஆம் இலக்க நுகர்வோர் சட்டத்தின் ஊடாக பல செயற்பாடுகளை செய்யக்கூடிய ஒன்றுக்கு, அத்தியாவசிய பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தும் போர்வையில் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டிருக்கும் அவசரகால சட்டம், அரசாங்கத்தின் தவறு மற்றும் இயலாமையை மூடி மறைப்பதற்காக கொண்டுவரப்பட்ட தன்னிச்சையான செயற்பாடாகும் என தெரிவித்துள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அறிவித்திருக்கிறார்.

நாட்டில் கொவிட்-19 தொற்று ஏற்பட்டதிலிருந்து அதிகம் உழைத்தவர்கள் அல்லது வருமானமீட்டியவர்கள் என்ற பட்டியலில் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மாறிவிட்டன. ஒவ்வொருவர் வீட்டிலும் எது இருக்கிறதோ இல்லையோ, ஒன்றுக்கு இரண்டு திறன்பேசிகள், டப்கள், மடிக்கணினிகள் வந்துவிட்டன. அதற்குக் காரணம் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற பெற்றோரின் எண்ணமாகும். அதற்காக அவர்களிடமிருந்து அனைத்து நிறுவனங்களும் பணத்தையும் கடன்களையும் சேர்த்துக் கொண்டன. இப்போது யாரிடமும் கையில் பணமில்லை என்ற நிலைதான். 'யார்குடிகெட்டாலும் பரவாயில்லை நமக்கு ஏதோ ஆனால் சரி' என்பதே இதற்குக்காரணம். இதிலிருந்து வறிய அடிமட்ட மக்களை நாம் ஒதுக்கி வைத்துவிடவேண்டும்.

முதல் தடவை நாடு முடக்கப்பட்ட பின்பு, நாம் ஏதோ மீண்டுவிட்டோம் நிலைப்பாட்டிலேயே எல்லாமும் நடந்து முடிந்தது. ஆனால், அதன் பின்னர் நடைபெறுகின்றவைகள் கவலைக்கிடத்தை ஏற்படுத்திவிட்டன. மக்களின் வாயிலும் வயிற்றிலும் அடிக்கும் செயற்பாடு காரணமாக நடைபெறும் கொடுமைகள் சொல்லில் அடங்காதவைகளாக இருக்கின்றன.

ஆரம்பத்தில் மஞ்சள், உழுந்து போன்ற பொருள்கள் இறக்குமதி தடைக்குள்ளாகின. அதனால் நாட்டுக்குள் மக்கள் கட்டாயமாகப்பயன்படுத்தும் இவற்றின் விலை மலைபோல் ஆனது, பின்னர் சேதனப் பசளைப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் கொள்கை அறிவிப்பு மூலம் நாட்டு மக்களின் விவசாய உற்பத்திகள் குறைக்கப்பட்டன. பின், பெற்றோல், டீசல் உள்ளிட்ட வாகன எரிபொருள் விலைஅதிகரிப்பு. படிப்படியாக சீனி, பருப்பு, மீன்ரின், தேங்காய் எண்ணை, கோழி இறைச்சி, பாண், புளி என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இந்த நீளத்திற்கு யார் காரணம்?

சட்டியில் இருக்கும் போதுதான் அகப்பையில் கிடைக்கும். ஆனால் நம்நாட்டில் சட்டியில் இல்லாதபோதே நாம் கொடும்போம் என்று சொல்கின்ற நிலைமை உருவாக்கப்படுகிறது. இறக்குமதி நிறுத்தப்படுகிறது. ஆனால் ஏற்றுமதிக்கான நடவடிக்கைகள் மாத்திரம் முன்னெடுக்கப்படுகிறது. எனக்கு வரவு மாத்திரமே வேண்டும் செலவல்ல என்பது எவ்வாறான சமன்பாடாக இருக்கும் என்பதே நகைப்புக்கானது.

நாட்டைக் கட்டியெழுப்பும் சமன்பாடு எல்லோருக்கும் பிடித்ததுதான், பல தசாப்தங்களை உள்நாட்டு யுத்தத்தில் நாம் இழந்துவிட்டோம். அதனை மீட்பதாக இருந்தால் அனைவரையும் அரவணைக்கும் நிலைப்பாடு ஒன்று மூலமே சாத்தியப்படுத்த முடியும். ஒருமிப்பு, அரவணைப்பு இல்லாத வேளையில் எதுவுமே சாத்தியமில்லை. கொவிட் நிலைமையில் சுகாதார, வைத்தியத்துறையினரின் சேவையை நாம் அனைவரும் கைகூப்பி பாராட்ட வேண்டும். ஆனால் அதற்கு நம் எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியம். அது முழுமையாக இல்லாமையாலேயே நாடு சிவப்பு எச்சரிக்கை வரை சென்றிருக்கிறது.

கடந்த நல்லாட்சி ஜனாதிபதி, பிரதமர், பாராளுமன்றத்தின் ஒருமிப்பு இல்லாமையால் வீணே போனது. இப்போதும் எல்லாமும் ஜனாதிபதி ஒருவரின் முடிவுகளிலும், உத்தரவுகளிலும் தனியே ஒருபக்கம் நடைபெறுவதாகவே எதிர் அரசியல் தரப்பினர் அனைவரும் குற்றம்சாட்டுகின்றனர். இந்தநிலைமை நாட்டை ஆபத்திலேயே தள்ளிவிடும்.

செல்வந்தரை மேலும் செல்வந்தராக்கும், வறியவர்களை மேலும் மேலும் வறுமைக்குள் தள்ளும் முதலாளித்துவம் வேண்டாமென்றே சமூகத்தில் வாழும் நாம் எதிர்பார்க்கிறோம், வேண்டிக்கொள்கிறோம். ஆனால் நாடுகளில் நடைபெறும் அரசியலும் அதனையே செய்து கொண்டிருக்கிறது. அவசரகாலப்பிரகடனமும் அதனையே செய்யும் செய்யத் தொடங்கியிருக்கிறது.

சில தினங்களுக்கு முன்னர், பாரியளவிலான நெல்லைப் பதுக்கிவைத்திருக்கும் முதலாளிகளை விட்டுவிட்டு விவசாயிகள் சேமித்து வைத்துள்ள நெல்லை பறிமுதல் செய்யும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து வெறுமனே விட்டுச் செல்லக்கூடிய ஒன்றல்ல. இதனைப்படிப்படியாக ஆராய்ந்தால் நாட்டிலுள்ள சாதாரண விவசாயிகள் மாத்திரமல்ல ஏனையவர்களின் நிலைமையும் இதுவாகத்தான் இருக்கிறது.

வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில், மக்களின் கண்ணீரிலும் பிரச்சினைகளிலும் ஏறி இருந்து கொண்டு அரசியல் செய்யாமல் அவர்களின் கண்ணீரையும், பிரச்சினைகளையும் துடைக்கும் கரங்களாக அரசியல்தலைவர்கள் இருப்பார்கள். ஆனால் இல்கையில், அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வந்தவுடன் சம்பாதிப்பதிலேயே அக்கறை காட்டுவார்கள்.

பொருளாதாரத்தினை நாடு மீட்குமா அல்லது அன்றாடம் வாழ்க்கைச்செலவையே தூக்கமுடியாது தவிக்கும் மக்கள் மீட்கப்படுவார்களா, மீள்வார்களா என்பது நம்மிடமில்லை. இருந்தாலும் பல்வேறு விமர்சனங்களுக்குள் சிக்கித் தவிக்கும் அவசரகால நிலைப்பிரகடனம் மீளப்பெறப்படுமா என்பதற்கு காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

ஆரோக்கியமானதும் பயனுள்ளதுமான பிரஜையை உருவாக்குதல், நஞ்சற்ற உணவு வேளையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ளல், இலங்கையின் விவசாயத்துறையானது, எதிர்வரும் தசாப்தங்களில் முற்றுமுழுதாகச் சேதனப் பசளையைப் பயன்படுத்தி, மேற்கொள்வதற்கு வழிவகுத்தல் போன்ற நடைமுறைகளை நாம் அனுபவிப்பதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்வரையில் காத்திருப்போம்.

ஏதோ இலங்கையில் பட்டினிச்சாவு வராதிருந்தால் சரியென்று எண்ணிக்கொள்வோம். எல்லா அஸ்திரங்களையும் பிரயோகித்து நிராயுதபாணிகளானாலும் ஞானம் வருகிறதா எனப் பார்ப்போம்.

## கடிதங்கள்

### திக்குவில் கிராமத்தில்

# வனவள திணைக்களம் அடாவடித்தனம்

கிளிநொச்சி, ஜெயபுரம் வடக்கின் திக்குவில் பகுதியில் அமைந்துள்ள மக்களின் பயிர்ச் செய்கை நிலங்களில், மரக்கன்றுகள் நடுகை செய்ய உள்ளதாகத் தெரிவித்து, வனவளத் திணைக்களம் அடாத்தாக மக்களின் காணிகளைத் துப்புரவு செய்வதாக திக்குவில் மக்கள் தெரிவிக்கின்றனர்.

திக்குவில் கிராம மக்கள், 30 ஆண்டுகளுக்கு மேலாக, இப்பகுதியில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது 15 வரையான குடும்பங்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளன. பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலங்களை, அபகரிக்கும் நோக்கத்துடன் வனவளத் திணைக்களம் மரக்கன்றுகளை நடுகை செய்வதாகவும் திக்குவில் கிராமத்தின் பற்றைகளை துப்புரவு செய்வதாகவும் திக்குவில் மக்களால் ஜெயபுரம் கிராம அலுவலர், பூநகரி பிரதேச செயலாளர் ஆகியோருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பூநகரி பிரதேசத்தில் பொது மக்களுடன், தொடர்ச்சியாக வனவளத் திணைக்களத்தினர் முரண்படும் நிகழ்வுகள் சம்பவிக்கின்றன. இரு மாதங்களுக்கு முன்னர், ஏ-32 சாலைக்கு அருகில் பாலைப் பழங்கள் பிடுங்கிக் கொண்டிருந்த அப்பாவி மக்களின் நான்கு கத்திகளைப் பிடுங்கிச் சென்றமை உட்பட பல்வேறு விடயங்களில், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் வனவளத் திணைக்களத்தினர் அடாத்தான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றார்கள். இதுதொடர்பாக, பொது மக்களால் அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

– நடராசா கிருஸ்ணகுமார்

தடுப்பூசி திட்டத்தில் கவனிக்கப்படாத விடயம்:

# முறையான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா?



ச. சேகர்



உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரையின் அடிப்படையில் நாட்டில் கொவிட்-19 தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் கண்டிப்பாக அருகாமையிலுள்ள தடுப்பூசி வழங்கும் நிலையத்துக்கு சென்று, தமக்குக் கிடைக்கும் முதல் தடுப்பூசியை வகை வேறுபாடின்றி செலுத்திக் கொள்ளுமாறு அரசாங்கமும் சுகாதாரத் துறையைச் சேர்ந்தவர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

கொவிட்-19 தொற்று ஏற்பட்டு அதனால் ஏற்படக்கூடிய மரணத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு இரண்டு தடுப்பூசிகளையும் இட்டுக் கொள்ளுமாறு இந்தத் தரப்பினர் கூறுகின்றனர்.

நபர் ஒருவருக்கு கொவிட்-19 தொற்று ஏற்பட்டால் ஏற்படக்கூடிய அறிகுறிகள் என காய்ச்சல், தடிமல், மூக்கிலிருந்து திரவம் வடிதல், தலைவலி, மூட்டுவலி, நெஞ்சு வலி, மூச்சிழுப்பதில் சிரமம், மூச்சுத் திணறல், இருமல், சுவை மற்றும் வாசனை அற்றுப் போதல், களைப்பு போன்றன தெரிவிக்கப்பட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எவருக்கேனும் இவ்வாறான அறிகுறிகள் காணப்பட்டால், ஏனையவர்களிடமிருந்து உடனடியாக தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும், பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டு தொற்று உள்ளமையை உறுதி செய்து கொள்ளுமாறும், சுகாதார தரப்பினால் வழங்கப்பட்டுள்ள அவசர அழைப்புத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, வைத்திய அதிகாரிகளால் வழங்கப்படும் ஆலோசனைகளைப் பின்பற்றுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது பரவலாக வழங்கப்படும் கொவிட்-19 தடுப்பூசி வர்த்தக நாமங்களில் சீனாவின் தயாரிப்பான சினோஃபாம், இந்தியா மற்றும் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட அஸ்ட்ராசெனெகா, அமெரிக்க தயாரிப்பான மொடர்னா மற்றும் ஃபைசர், ரஷ்யத் தயாரிப்பான ஸ்புட்னிக் வி போன்றன அடங்கியுள்ளன.

எளிமையாகக் குறிப்பிடுவதானால், சினோஃபாம் தடுப்பூசியில் காணப்படும் சூத்திரமானது, உயிரிழந்த கொரோனா வைரஸ் மனித உடலினுள் செலுத்தப்பட்டு, மனித நோய் எதிர்ப்புச் சக்தித் தொகுதிக்கு கொரோனா வைரஸ் தொடர்பில் எச்சரிக்கை ஏற்படுத்தப்படுகின்றது. ஏனைய அனைத்து தடுப்பூசிகளிலும் வலுக்குன்றிய வைரஸ் உள்வைக்கப்பட்டு மனித உடலினுள் செலுத்தப்படுகின்றது.

பரவலாக நாட்டில் வழங்கப்படும் சீனத் தயாரிப்பான சினோஃபாம் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களில் பெரும்பாலானாவர்களுக்கு உடலில் எவ்விதமான மாற்றங்களையும் அவதானிக்க அல்லது உணர முடியாது என்பது தடுப்பூசி செலுத்திக் கொண்ட பலரின் கருத்தாக அமைந்துள்ளது.

ஆனாலும், வலுக்குன்றிய வைரஸ் அடங்கிய இதர ரக தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களில் பலருக்கு தடுப்பூசி செலுத்தி ஒரு வார காலப்பகுதியினுள் கொவிட்-19 தொற்று ஏற்பட்டதற்கு நிகரான அறிகுறிகள் தோன்றுகின்றன. குறிப்பாக, அண்மையில் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களில் இந்த நிலையை அதிகளவு அவதானிக்க முடிந்தது.

ஜனவரி மாதம் இலங்கைக்கு இந்தியா நன்கொடையாக வழங்கியிருந்த அஸ்ட்ராசெனெகா தடுப்பூசியை ஏற்றிக் கொண்டு, பல மாதங்களாக இரண்டாம் ஊசியை ஏற்றிக் கொள்ள முடியாமல் காத்திருந்த பிரதானமாக மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கான இரண்டாம் தடுப்பூசியாக ஜப்பானிலிருந்து வழங்கப்பட்ட அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி ஏற்றுவது ஓகஸ்ட் 2ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 7 இலட்சம் பேர் வரை இந்த தடுப்பூசியை தமது இரண்டாவது ஊசியாக ஏற்றிக் கொண்டுள்ளனர்.

இந்தத் தடுப்பூசி இலங்கையை ஓகஸ்ட் 1ஆம் திகதி வந்தடைந்த நிலையில், இவை மறுநாளான ஓகஸ்ட் 2ஆம் திகதி முதல் கொழும்பில் வழங்கும் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை நாட்டின் ஜனாதிபதி தம்வசம் கொண்டுள்ளார் என்பதை வெளிப்படையாக காண முடிகின்றது. குறிப்பாக தற்போது அமலிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு தொடர்பான அறிவிப்பு வெளியாகிய விதம் மற்றும் நாட்டு மக்களுக்கு ஓகஸ்ட் 20ஆம் திகதி ஜனாதிபதி ஆற்றிய உரை போன்றவற்றிலிருந்து இது புலனாகியது. இவரின் நிலைப்பாடு என்பது கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரே தீர்வு தடுப்பூசி செலுத்துவது என்பதாகவே உள்ளது. நாட்டு மக்களையும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு ஜனாதிபதியும் கோரியிருந்தார்.

நாடு அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதுடன், பாரிய பொருளாதார நெருக்கடிக்கும் முகங்கொடுத்துள்ளது. இந்த நிலையில் அரசாங்கத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் நிதி அமைச்சர் தமது ஆலோசனைகளை முன்வைத்துள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாட்டுக்குத் தேவையான கொவிட்-19 தடுப்பூசி கொள்வனவு செய்யும் பணியை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. நாட்டு மக்களுக்கும் இலவசமாகவே இந்த தடுப்பூசிகளை வழங்குகின்றது. இந்தப் பணி வரவேற்கத்தக்கது.

ஆனாலும், இவ்வாறு வழங்கப்படும் தடுப்பூசி, நாட்டினுள் கொண்டு வரப்பட்டதன் பின்னர் முறையான ஆய்வக பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாமை காரணமாக மக்கள் மத்தியில் ஒருவித பீதி நிலை, தெளிவற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றால் பிழையாகாது. குறிப்பாக ஜப்பானிலிருந்து கொண்டு வரப்பட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த அஸ்ட்ராசெனெகா ரக தடுப்பூசி காரணமாக, பலர் கொவிட்-19 நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

குறிப்பாக, தடுப்பூசி ஏற்றிக் கொண்டு ஒரு வாரத்தினுள் பலருக்கு கொவிட்-19 நோய் அறிகுறி தென்பட்டது. இதில் பெரும்பாலானோருக்கு சிறியளவிலான அறிகுறிகளே காணப்பட்டன. வலுக்குன்றிய கொரோனா வைரஸ் உடலினுள் செலுத்தப்பட்டதும், அதற்கு எதிராக மனித நோய் எதிர்ப்பு சக்தி போராட ஆரம்பிக்கின்றது. இதன் போது, குறித்த நபரின் நோய் எதிர்ப்பு சக்தி வலுவாகக் காணப்பட்டால், அவரால் பெருமளவில் பாதிப்புகளை உணர்ந்திருக்க முடியாது. ஆனாலும், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களால் அதிகளவில் அறிகுறிகளை உணர முடிந்திருந்தது.

நாட்டில், டெல்டா பிறழ்வு பரவிய காலகட்டத்தில் இந்த நிலையும் எழுந்தமையாலும், ஜப்பானின் அஸ்ட்ராசெனெகா தொடர்பில் நாட்டில் எவ்விதமான ஆய்வக பரிசோதனைகளும் மேற்கொள்ளாது கிடைத்தவுடன் அனைவருக்கும் ஏற்றப்பட்டதும் அவ்வாறு ஏற்றிக் கொண்டவர்களுக்கு தெளிவற்ற ஓர் அச்ச நிலையை தோற்றுவித்திருந்தது.

இவ்வாறு தடுப்பூசி செலுத்திக் கொண்டு, மூன்று முதல் நான்கு தினங்களுக்குள் நோய் அறிகுறிகள் தோன்ற, தனியார் வைத்தியசாலைக்குச் சென்று பி.சி.ஆர் பரிசோதனை செய்து, அதன் முடிவில் கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளன.

எனவே, நாளாந்தம் ஊடகங்களில் தோன்றி "அடுத்த இரு வாரங்கள் தீர்மானம் மிக்கவை; நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கும்; நாட்டை மேலும் முடக்கி வைக்க வேண்டும்; விஞ்ஞான ரீதியான முடக்கம் வேண்டும்; மக்கள் வீட்டினுள்ளேயே இருக்க வேண்டும்" என அரைத்த மாவையே அரைக்கும் சுகாதாரத் துறையைச் சேர்ந்த நிபுணர்கள், ஏன் இவ்வாறு நாட்டினுள் கொண்டு வரப்படும் தடுப்பூசிகள் தொடர்பில் உள்நாட்டு தட்பநிலைகளுக்கு ஏற்ற வகையில் ஆய்வக பரிசோதனைகளை முன்னெடுப்பதில்லை அல்லது அவ்வாறு மேற்கொள்ளுமாறு பரிந்துரைப்பதில்லை எனும் ஒரு கேள்வியை எழுப்பியுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்த போதிலும், இந்த தடுப்பூசிகள் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. எமது நாட்டு உணவுப் பழக்க மற்றும் வாழ்க்கைப் பழக்க கலாசார முறைகளுக்கு பொருந்தும் வகையிலா அமைந்துள்ளன என்பது தொடர்பில் ஆய்வை மேற்கொண்டு, அதனால் எழக்கூடிய அறிகுறிகள் தொடர்பில் பொது மக்களுக்கு ஏன் முன்கூட்டியே அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதில்லை? தடுப்பூசி ஏற்றினால் ஏற்றிக் கொண்ட நபர் தம்மை குறிப்பிட்ட காலத்தக்கு தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டுமா? உயிருடனுள்ள வலுக்குறைந்த வைரசைக் கொண்ட தடுப்பூசியை செலுத்திக் கொண்டவரின் உடலில் காணப்படும் வைரஸ் அதே வீட்டில் வசிக்கும் மற்றுமொருவருக்கு தொற்றுமா? இது போன்ற தெளிவுபடுத்தல்களை ஏன் இவர்கள் வழங்குவதில்லை?

தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு வலியுறுத்தும் சுகாதாரத் துறை நிபுணர்களே, அவ்வாறு ஏற்றிக் கொண்டால் அதனால் நபர் ஒருவர் எதிர்பார்க்கக்கூடிய உடனடி பின்விளைவுகள் பற்றியும் தெளிவுபடுத்தல்களை வழங்குங்கள். அதனால் ஏற்கெனவே பொருளாதார நெருக்கடியிலும், தமது சுகாதாரம் பற்றி அச்சமடைந்துள்ள மக்கள் தடுப்பூசி ஏற்றிக் கொண்டதன் பின்னர் எதை எதிர்பார்க்கலாம் என்பது பற்றி அறிந்திருப்பார்கள்.

தடுப்பூசி வழங்குவது அரசாங்கத்தினதும், சுகாதாரத் துறையினதும் கடமை என்பதைப் போல, தடுப்பூசி ஏற்றிய பின்னர் எவ்வாறான அறிகுறிகள் மற்றும் பின்விளைவுகள் ஏற்படும் என்பதை பற்றி அடிக்கடி தெளிவுபடுத்த வேண்டியதும் முக்கியமானதாகும்.

நாட்டினுள் கொண்டு வரப்படும் தடுப்பூசித் தொகுதிகள் உள்நாட்டில் முறையான ஆய்வக பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே மக்களுக்கு விநியோகிக்க ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு செய்வதனூடாக, ஜப்பானில் அண்மையில் ஏற்பட்ட மொடர்னா தடுப்பு மருந்து பழுதடைந்திருந்ததால் ஏற்பட்ட உயிரிழப்புகளைப் போல, இங்கும் இடம்பெறுவதை தவிர்த்துக் கொள்ளலாம். மக்களையும் அச்சமின்றி தடுப்பூசி ஏற்றிக் கொள்ளச் செய்யலாம்.

இதுவரையில் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அவசரத் தேவைக்கு (Emergency purpose use) பயன்படுத்துவதற்காகவே கொவிட்-19 தடுப்பூசிகள் அனைத்தும் அனுமதிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கட்டாக்காலிகளின் வீதிகள்

## அதிகரிக்கும் வீதி விபத்துகள்



வ. சக்திவேல்
shagthivel@gmail.com



கால்நடைகள் பகலில் மாத்திரமின்றி இரவு வேளைகளிலும், வீதிகளில் திரிவதனாலும், நடு வீதியில் உறங்குவதனாலும், வீதி விபத்துகள் அடிக்கடி ஏற்படுகின்றன.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையினர் ஒருமுறை இவ்வாறு வீதிகளில் இரவில் திரியும் கால்நடைகளை பிடித்து அதன் உரிமையாளர்களுக்கு எதிராக தண்டப்பணம் அறவீடு செய்தார்கள். பின்னர் அவர்களும் அச்செயற்பாட்டை நிறுத்திவிட்டார்கள். இவற்றினைவிட அவர்கள் ஒலிபெருக்கி மூலம் கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துமாறு அறிவித்தல் விடுத்தார்கள், அதனையும் உரிமையாளர்கள் பொருட்படுத்தவில்லை.

எனினும், பிரதேசசபை உள்ளிட்ட ஏனைய சம்மந்தப்பட்ட துறைசார்ந்த அமைப்பினர் மிகவும் அழுத்தமான செயற்பாடகளை முன்னெடுக்க வேண்டும். என வர்த்தகர்களும் பொதுமக்களும் பாதசாரிகளும் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி, களுவாஞ்சிகுடி வைத்தியசாலை வீதி, பட்டிருப்பு சந்தி, மணல் வீதி, பொதுச் சந்தை பகுதி உள்வீதிகள் உள்ளிட்ட பல பகுதிகளிலும், இவ்வாறு கால்நடைகள் கட்டாக்காலியாக திரிவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு பொறுப்பற்ற வித்தில் கட்டாக்காலிகளாக கால்நடைகளை விட்டுள்ளனர். அவை, இரவும் பகலும் இலாமல் எந்த வேளைகளிலும் வீதிகளில் திரிவதனால் பிரயாணிகளும் பொதுமக்களும், மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலிகளாக மாடுகள், ஆடுகள், நாய்கள் உள்ளிட்ட கால்நடைகளை விடுபவர்களுக்கு, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையால் பலமுறை ஆலோசனைகள் தெரிவித்தும் அவர்கள் இவ்வாறு தமது கால்நடைகளைப் பொறுப்பற்ற விதத்தில் விட்டுள்ளதாக பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

"எமது பிரதேசசபை எல்லைக்குள், கட்டாக்காலியாக வீதிகளில் திரிந்த மாடுகளை, களுவாஞ்சிகுடி பொலிஸாரின் உதவியுடன் பிடித்து, உரிமையாளர்களிடம் தண்டப்பணமும் அறவீடு செய்தோம். இதன் மூலம் குறிப்பிட்ட காலத்துக்குள் வீதிகளில் காட்டாக்காலிகளின் நடமாட்டம் ஓரளவு குறைந்திருந்தது. தற்போது மீண்டும் ஆர்பித்துள்ளது. கொவிட்-19ஆல் இவ்வாறு வீதிகளில் திரியும், கட்டக்காலி கால்நடைகளைப் பிடித்து அதன் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாமலுள்ளது. இருந்தபோதிலும், கொவிட் - 19 நிலைமையைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் எமது செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம்" என மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் ஞா.யோகநாதன் தெரிவித்தார்.

பிரதேச சபையினர், கட்டாக்காலி கால்நடைகளை விடும் உரிமையாளர்களுக்கு எதிராக, சட்டநடவடிக்கை எடுக்கும் பட்டசத்தில் இதைத் தடுக்க முடியும். அத்துடன், பாதசாரிகள் தடையின்றிப் பயணிக்கவும் முடியும்.

இது இவ்வாறு இருக்க, மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் தினமும் இடம்பெறுகின்றன. இவற்றால் பொருட்சேதங்கள் மாத்திரமின்றி விலை மதிக்க முடியாத உயிரிழப்புகளும் இடம்பெறுகின்றன. அதிகமான வீதி விபத்துகள் சாரதிகளின் கவனயீனம் காரணமாக நிகழ்வதாக அறிய முடிகின்றது.

சாரதிகள் முறையாக பயிற்சி பெற்று சாரதி அனுமதிப் பதிரங்கள் பெறுகின்றார்களா? உரிய இடத்தில் சரியான முறையில் மருத்துவச் சான்றிதழ் பெறுகின்றார்களா? வீதி ஒழுங்குகளை, சமிக்ஞைகளை முறையாகப் பின்பற்றுகின்றார்களா? என பல கேள்விகள் பொது மக்கள் தரப்பில் எழுப்பப்படுகின்றன.

இது ஒருபுறமிருக்க, வீதிகளில் உரிய இடங்களில் வீதிச் சமிக்ஞைகள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளனவா? வீதித்தடைகள் போடப்பட்டுள்ளனவா? மற்றும் வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு வீதிகள் செப்பனிடப் பட்டுள்ளனவா? எனவும் பாதசாரிகளும், வினா எழுப்புகின்றனர்.

இரவு வேளைகளில் பயணம் செய்யும் வாகனங்களுக்கு ஏற்ற வகையில் வீதி மின்விளக்குகள் இல்லை என சாரதிகள் குற்றம் சுமத்துகின்றனர். இவை மாவட்டத்தின் பல இடங்களிலும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சாரதிகள் போட்டித்தன்மையில் வாகனங்களை அதிவேகத்தில் செலுத்தும் போது, வேகக் கட்டுப்பாட்டை இழந்து பலவிபத்துகள் திகழ்கின்றன.

கடந்த யுத்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பலர் அந்த யுத்த வடுக்களைச் சுமந்த வண்ணம் அங்கவீனர்களாகவும், வலது குறைந்தவர்களாகவும், காணப்படுகின்றனர், ஆனாலும் தற்போதைய சூழலில் மாவட்டத்தின் நாலா பக்கமும் நாளாந்தம் இடம்பெறும் வீதி விபத்துக்களாலும் நிரந்தர அங்கவீனத்திற்கு உள்ளாவதனையும் அறிய முடிகின்றது. இப்படிப்பட்ட சம்பவங்களைக் குறைப்பதற்கு மாவட்டம் தழுவிய ரீதியில் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

மாதாந்தம் அல்லது குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் சாரதிகளுக்கு போக்குவரத்து பொலிஸார் வீதி நடைமுறைகள் பற்றி ஆலோசனைகள் கூறவேண்டும். குற்றமிழைக்கப்படும் சாரதிகளுக்கு தகுந்த தண்டனை வழங்குவதோடு, மட்டுமல்லாமல் காலத்திற்கு காலம் அவர்களின் நடத்தைகள் பற்றியும் நன்கு அவதானிப்பில் ஈடுபடல் வேண்டும்.

அத்தோடு சாரதிகள் மாத்திரமின்றி பொதுமக்களுக்கும் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு நிகழ்வுகளை, முன்னெடுத்துச் செல்ல வேண்டும். தகுதியானவர்களுக்கு மாத்திரம் சாரதி அனுமதிப் பதிரங்களை வழங்குதல், விபத்துகள் நிகழ்வதற்கு காரணமாய் அமைந்தவர்களுக்கு பக்கச்சார்பற்ற தண்டனைகள் வழங்க வேண்டும். உரிய இடங்களில் முறையான வீதிச் சமிக்கைகள், வீதித்தடைகள் இடப்பட்டிருத்தல் வேண்டும், என்ற விடையங்களை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மட்டக்களப்பு மாட்டத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு உரிய பூர்வாங்க செயற்றிட்டம் உருவாக்கப்பட வில்லையாயின் எதிர்காலத்தில் இன்னும் பாரிய இழப்புக்களைச் சந்திக்க வேண்டிவரும் என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

கடந்த காலங்களைப் போலல்லாமல் கல்முனை- திருகோணமலை வீதி, மட்டக்களப்பு- கொழும்பு நெடுஞ்சாலை, மட்டக்களப்பு - கல்முனை வீதி, மற்றும் படுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள வீரமுனை - மட்டக்களப்பு பிரதான வீதிகளிலேயே இவ்வாறு அதிகளவு விபத்துகள் பதிவாகின்றன.

மட்டக்களப்பு மக்களின் மனங்களில் பதிவாகின்ற வீதி விபத்துகள் தொடர்பான வடுக்களை இல்லாதொழிக்க துறை சார்ந்தோர் துரிதகதியில் செயற்பட்டு பொறிமுறை ஒன்றினை உருவாக்க வேண்டும் என்பதையே பலரும் எதி

இந்நிலையில், வீதி விபத்துகளால் ஏற்படும் இழப்பு என்பது ஈடு செய்ய முடியாத ஒன்றாக ஆகி விடுகின்றது. இவற்றைத் தவிர்க்க எல்லோரும் ஒருமித்துப் பணியாற்றவேண்டும்.

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, அதற்கு ஏற்றாற்போல் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. சாரதி அனுமதிப்பத்திரம் எடுக்கும்போது மெதுவாக பயிசிபெற்று சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். கையில் சாரதி அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெற்றதும் அளவுக்கு அதிகமான வேகத்தில் குறிப்பாக இளைஞர்கள் பயணிக்கின்றார்கள். 70 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்க வேண்டியவர்கள் 160 கிலோ மீற்றர் தூரத்தில் வாகனங்களை ஓட்டுகின்றார்கள். இதனால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீணான விபத்துக்களைச் சந்திக்கின்றார்கள். அடுத்து மது போதையில் வாகனத்தைச் செலுத்துதல், நித்திரையில் வாகனத்தைச் செலுத்துதல், கையடக்கத் தொலைபேசிகளை பாவித்துக் கொண்டு வாகனத் செலுத்துதல், இவ்வறானவை விபத்துக்களை ஏற்படுத்துவதற்காக பிரதான காரணமாகக் காணப்படுகின்றது.

வெளிநாட்டில் உள்ள நடைமுறைகளை இலங்கைக்கும், கொண்டு வரவேண்டும் அந்த வகையில், வீதிகளை ஒரே தடவையில் 3 வாகனங்கள் பயணிப்பதற்குரிய ஒருவழிப்பாதைகளாக வீதிகளை மாற்றவேண்டும், போக்குவரத்துப் பொலிசார் மாத்திரம் போதாது, கண்காணிப்புக் கமராக்களைப் பெருத்தவேண்டும், மதுபோதையில் வாகனம் செலுத்துவதைத் தடுக்கவேண்டும். வலப்பக்கம் திரும்பும்போது ஏனைய வாகனத்திற்குப் பாதிப்பு வராதவகையில் திரும்பவேண்டும். இவ்வாறான நடைமுறைகளைக் கடைப்பிடித்தால் 99 வீதம் வீதி விபத்துக்களைக் குறைக்கலாம் என மோட்டார் போக்குவரத்து உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மோட்டார் போக்குவரத்து உயர் அதிகாரியின் கருத்திற்கிணங்க இலங்கையும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடாகும் ஏனைய நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் போக்குவரத்து நடைமுறைகளை இலங்கையிலும், கடைப்பிடிக்கும் பட்சத்தில் அப்பாவி உயிர்கள் வீதியில் காவு கொள்ளப்படுவதைத் தவிக்கலாம். அதுபோல் சாரதிகளும் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்து வாகனம் செலுத்தினால் விபத்துக்களைக் குறைக்கலாம் என்பதோடு மது போதையில் வாகனத்தைச் செலுத்துதல், நித்திரையில் வாகனத்தைச் செலுத்துதல், கையடக்கத் தொலைபேசிகளை பாவித்துக் கொண்டு வாகனத்தைச் செலுத்தாமல் செயற்படுவது வரவேற்கத்தக்கதாகும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.



## முடிந்தது 20 ஆண்டுகால போர்

# திரும்பிப் பாருங்கள்

காபூல்: ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்க படைகள் ஒரு நாள் முன்னதாக வெளியேறின. அதனால், 20 ஆண்டுகால போர் முடிவுக்கு வருகிறது. அமெரிக்க படைகள் வெளியேறியதால் காபூலில் தலிபான்கள் துப்பாக்கி சூடு நடத்தியும் பட்டாசு வெடித்தும் கொண்டாடினர்.

கடந்த 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 9 ஆம் திகதி அமெரிக்காவின் இரட்டை கோபுர தாக்குதலுக்கு பின்னர், தீவிரவாதிகளை போட்டுத் தள்ளுவதற்காக அடுத்த சில வாரங்களில் ஆப்கானிஸ்தானுக்குள் அமெரிக்க படைகள் நுழைந்தன. அதன்பின், கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்க படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஆப்கானிஸ்தானை, தலிபான் தீவிரவாதிகள் கடந்த சில வாரங்களுக்கு முன் கைப்பற்றினர்.

அமெரிக்க அரசு நிர்வாகம் தங்களது படைகளை இன்றுக்குள் (ஒக. 31) வாபஸ் பெறுவதாக அறிவித்ததால், தலிபான்கள் ஆப்கானிஸ்தானை தங்களது கட்டுக்குள் படிப்படியாக கொண்டு வந்தனர். தலிபான்களுக்கும் அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஆப்கானில் வசித்து வந்த வெளிநாட்டினரை அந்தந்த நாடுகள் கடந்த 3 வாரங்களாக வெளியேற்றின.

தலிபான்களின் அச்சுறுத்தலுக்கு பயந்து ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான் மக்களும் வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்றனர். இதனால் காபூல் விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்தனர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அங்கு நடந்த துயரங்களை உலகமே பார்த்துக் கொண்டு இருந்தது. கிட்டதிட்ட 1.5 இலட்சம் பேர் ஆப்கானில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

தலிபான் - அமெரிக்க படைகள் விவகாரம் ஒருபக்கம் இருக்க, ஐஎஸ்ஐஎஸ் - கே என்ற அமைப்பின் தீவிரவாத குழுக்கள், தலிபான்களுக்கு எதிராக செயல்படும் ஆப்கானிஸ்தானின் பஞ்ச்ஷிர் மாகாண படைகளுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டு வந்தன. ஐஎஸ் தற்கொலைப்படை தாக்குதலில் 13 அமெரிக்கர் உட்பட 170க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். அதன்பின் அமெரிக்கா நடத்திய பதிலடி ட்ரோன் தாக்குதலில் ஐஎஸ் தீவிரவாதிகளின் வாகனங்கள், முக்கிய தளபதிகள் சிலர் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. அதேநேரம், ஐஎஸ் தீவிரவாதிகள் நடத்திய மற்றொரு தாக்குதலில் குழந்தைகள் உட்பட 10 பேர் பலியாகினர்.

கெடு விதிக்கப்பட்ட ஒரு நாள் முன்னதாக, அமெரிக்கா தனது கடைசி விமானமான 'சி -17'-வுடன் காபூல் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு அமெரிக்கா சென்றடைந்தது. ஆப்கானின் ஆபத்தான கட்டங்களில் இருந்து நாடு திரும்பிய வீரர்களுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பிடன் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க படைகள் ஆப்கானைவிட்டு வெளியேறியதால், காபூல் உள்ளிட்ட நகரங்களில் பட்டாசு வெடித்தும், வானை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியும், வெடிகுண்டுகளை வானை நோக்கி வெடிக்க வைத்தும் தலிபான்களும், மக்களும்



கொண்டாடினர்.

ஆனால், காபூல் மக்கள் விமான நிலையத்தின் மீது மற்றொரு தாக்குதல் நடந்திருக்கலாம் என்று அஞ்சினர். இருந்தும் தலிபான்கள் தரப்பில் வெளியிட்ட செய்தியில், 'இது, கொண்டாட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு; காபூல் மக்கள் பயப்பட வேண்டாம். அமெரிக்க படைகள் சென்றுவிட்டன. 20 ஆண்டுகால போர் முடிவுக்கு வந்தது. இது வரலாற்று சிறப்புமிக்க தருணம்' என்று தெரிவிக்கப்பட்டது. அமெரிக்காவின் பிடியில் இருந்த காபூல் விமான நிலையம் இனி யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லாததால், இனிமேல் விமானப் போக்குவரத்துக்கு எந்த கட்டுப்பாடும் இல்லை என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த 2019 ஆம் ஆண்டு செப்டம்பரில் வெளியிடப்பட்ட தரவுகளின்படி, ஆப்கானில் தீவிரவாதிகளை அழிப்பதற்காக அமெரிக்க இராணுவம் 2001 ஆம் ஆண்டு முதல் 775 பில்லியன் டொலருக்கும் மேலாக செலவு செய்துள்ளது.

தற்போது, நேட்டோ மற்றும் அமெரிக்க படைகள் வெளியேறியதால், பல இலட்சம் மக்களை கொன்று குவித்த 20 ஆண்டுகால ஆப்கான் போர் முடிவுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இனி வரும் நாள்களில், தலிபான் தீவிரவாதிகள் தங்களது விருப்பப்படி ஆப்கானில் புதிய அரசை அமைக்க உள்ளார்கள். அந்த அரசு எப்படி இருக்கும்? என்று உலக நாடுகளே எதிர்பார்த்துக் கொண்டுள்ளன.

### 20 ஆண்டுகால போர் எப்படி நடந்தது?

**■ 2001 செப். 11:**



ஆப்கானிஸ்தானில் இருந்த ஒசாமா பின்லேடன் தலைமையிலான அல்-கொய்தா, அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக மையத்தை தகர்த்தது. இந்தத் தாக்குதலுக்காக நான்கு வர்த்தக விமானங்கள் கடத்தப்பட்டன. அதில், இரண்டு நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையத்தையும் மற்றொரு விமானம், வொஷிங்டனில் உள்ள அமெரிக்க பாதுகாப்புத்துறையான 'பென்டகன்' கட்டடத்தை தாக்கியது. நான்காவது விமானம், பென்சில்வேனியா வயல்வெளி பகுதியில் தரையில் விழுந்து நொறுங்கியது. இந்த தாக்குதல்களில் கிட்டத்தட்ட 3,000 பேர் கொல்லப்பட்டனர்.

**■ 2001 அக். 7:**

ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்களான காபூல், கந்தஹார், ஜலாலாபாத் ஆகிய பகுதிகளில் முகாமிட்டுள்ள தலிபன் மற்றும் அல் - கொய்தா இலக்குகளை அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்கின.

**■ 2001 நவ. 13:**

அமெரிக்க கூட்டுப்படையுடன் சேர்ந்து, தலிபான்களுக்கு எதிராக செயல்படும் வடக்கு கூட்டணியும் தாக்குதல்களை நடத்தின. இவர்கள் காபூலுக்குள் நுழைந்து தலிபான்களை விரட்டியடித்தனர்.

**■ 2004 ஜன. 26**

'லோயா ஜிர்கா' என்ற நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பிறகு, புதிய ஆப்கானிஸ்தான் அரசியலமைப்பு சட்டமானது. அந்த அரசியலமைப்பு, 2004 ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஜனாதிபதி தேர்தலை நடத்த வழிவகுத்தது.

**■ 2004 டிசம்பர் 7:**

ஆப்கான் ஜனாதிபதியாக ஹமீத் கர்ஸாய் தெரிவானார். இவர், தலிபான் எதிர்ப்பு குழுக்களை வழிநடத்தியவராவார்.

**■ 2006 மே 12:**

பிரிட்டிஷ் படைகள், ஆப்கானின் தெற்கில் உள்ள தலிபான் கோட்டையான ஹெல்மண்ட் மாகாணத்திற்குள் நுழைந்தன. அவர்கள், புனரமைப்பு திட்டங்களுடன் தலிபான்களையும் அழித்து வந்தனர். அங்கு ஏற்பட்ட மோதலில் 450க்கும் மேற்பட்ட பிரிட்டிஷ் படையினர் உயிரிழந்தனர்.

**■ 2009 பிப்ரவரி 17:**

ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்படும் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமா ஒப்புதல் அளித்தார். அதன் காரணமாக ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படையினரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து நாற்பதாயிரமாக உயர்ந்தது. அவர்கள் நாட்டின் தென் பகுதியில் தீவிர போர் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

**■ 2011 மே 2:**

அமெரிக்காவை சிதைத்த அல்-கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டான். பாகிஸ்தான் இராணுவ பயிற்சி மையத்தில் இருந்து, கிட்டதிட்ட ஒரு மைல் தூரத்துக்கும் குறைவான இடத்தில் பதுங்கியிருந்த பின்லேடன், அமெரிக்க கடற்படை அதிரடி வீரர்களால் கொல்லப்பட்டான். அவனது உடல் கடலில் தூக்கி வீசப்பட்டது. சிஐஏ தலைமையிலான 10 ஆண்டுகால வேட்டை பின்லேடனை கொன்றதுடன் முடிவுக்கு வந்தது. தீவிரவாதத்திற்கு எதிரான போரில் 'பாகிஸ்தான் நம்பமுடியாத கூட்டாளி' என்று அமெரிக்கா குற்றம்சாட்டியது.

**■ 2013 ஏப். 23:**

தலிபான் தீவிரவாத அமைப்பின் நிறுவனரான முல்லா முஹமது ஒமர் திடீரென இறந்தான். அவனது மரணம் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டாக வெளியிடப்படாமல் இரகசியமாக வைத்திருந்தனர். ஆப்கானிஸ்தான் உளவுத்துறையின்படி, முல்லா ஒமர் பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் இறந்ததாக கூறப்பட்டது. ஆனால், பாகிஸ்தான் அதனை மறுத்தது.

**■ 2014 டிச. 28**

முக்கிய தீவிரவாதிகள் கொல்லப்பட்ட நிலையில், ஆப்கானிஸ்தானில் நேட்டோ படையினரின் போர் நடவடிக்கைகள் முடிவுக்கு வருவதாக அறிவித்தனர். அமெரிக்காவும் தங்களது படையினரின் எண்ணிக்கை குறைத்துக் கொண்டது. அங்கேயே தங்கி இருந்தவர்கள் ஆப்கன் இராணுவத்தினருக்கும், காவல்துறையினருக்கும் பயிற்சி கொடுத்து வந்தனர்.

**■ 2015 ஆக. 10:**

படைகளின் வீரியம் குறைந்ததால், தலிபான்கள் மீண்டும் தங்களது தொடர் தற்கொலை படை தாக்குதல்கள், கார் குண்டுவெடிப்பு மற்றும் பிற தாக்குதல்களைத் தொடங்கினர். காபூலில் உள்ள பாராளுமன்ற கட்டடம் மற்றும் குண்டூஸ் நகரம் மீது தாக்குதல் நடத்தினர். காபூலில் உள்ள சர்வதேச விமான நிலையம்



தலிபான்களால் தாக்குதலுக்கு ஆளானது.

**■ 2019 ஜன. 25:**

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியாக அஷ்ரப் கனி பதவிவகித்த காலப்பகுதியில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

**■ 2020 பிப். 29:**

அமெரிக்கா, தலிபான்கள் இடையே, கத்தாரின் தோஹாவில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி, 14 மாதங்களுக்குள் அனைத்து வெளிநாட்டுப் படைகளையும் திரும்பப் பெற அமெரிக்கா மற்றும் நேட்டோ நட்பு நாடுகள் ஒப்புக்கொண்டன.

**■ 2021 ஏப். 13:**

2021 ஆம் ஆண்டு செப். 11 ஆம் திகதிக்குள் அனைத்து அமெரிக்க படைகளும் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் அறிவித்தார்.

**■ 2021 ஆக. 16:**

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதால் முக்கிய பிரமுகர்கள் நாட்டைவிட்டு தப்பி ஓடிவிட்டனர். ஆப்கன் அரசுப் படையினர், குறைந்தபட்ச எதிர்ப்பை மட்டுமே வெளிப்படுத்தினர். அதனால், தலிபான்கள் உயிர் சேதமின்றி ஆப்கானை தங்களுடைய வசமாக்கிக் கொண்டனர்.

**■ 2021 ஆக. 31:**

ஆப்கானிஸ்தானில் இருந்து தனது படைகள் முழுவதையும் விலக்கிக் கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் அறிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவை (யுஎன்எஸ்சி) நடத்திய அவசர கூட்டத்தில், இந்தியாவின் தற்போதைய தலைவர் தலைமை வகித்தார். அப்போது, ஆப்கானிஸ்தான் நிலைவரம் குறித்து முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில், 'ஆப்கானை மையமாக கொண்டு ஒரு நாட்டை அச்சுறுத்துவது அல்லது தாக்குவது அல்லது தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பது ஆகிய நடவடிக்கைகளில் மற்ற நாடுகள் ஈடுபடக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

**■ 200 வீரர்கள் எப்ப வருவாங்க?**

* கடைசியாக 5 அமெரிக்க இராணுவ விமானங்களில் மூலம் மக்கள் அழைத்து வரப்பட்டனர். ஆனால், இன்னும் 200 அமெரிக்கர் மற்றும் ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான் மக்கள் காபூலில் இருந்து வெளியேற முடியாமல் தவிக்கின்றனர். இவர்கள், ஆப்கானில் இருந்து வெளியேற வேண்டுமானால், இனிமேல் தலிபான்களின் அனுமதியை பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 04 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.